Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

## தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency post Office
303, K.K.S.ROAD JAFFNA T.P.021 - 22 2670
FAX - 222 3214 email-del-smskr @ evreka.lk
(சி.1136)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 27 (28.07.2003) திங்கட்கிழமை இதழ்: 298



அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனை வரவேற்கக் காத்திருக் கும் கேணல் கருணா மற்றும் தளபதிகள் ராம், ராபர்ட்.



மட்டக்களப்பு - இலுப்பையடிச்சேனை விளையாட்டரங்கில் தரையிறங்கும் வன்னியிருந்து சென்ற ஹெலி.



தமிழ்ச்செல்வனை கைலாகு கொடுத்து வரவேற்கிறார் மூத்த தளபதி கேணல் கருணா அம்மான்.

# கிழக்கிற்கு தமிழ்ச்செல்வன் அரசியல் விவகாரப் பயணம்!

## அங்குள்ள நிலைமை பற்றி விரிவாக ஆராய்வார்

(மட்டக்களப்பு)

**விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் - சமகால அரசியல் நிலை தொடர்பாக, கிழக்கு மாகாணத்திலுள்ள பொறுப்பாளர்கள் மற்றும் போராளிகளுடன் கலந்தாலோசனை நடத்துவதற்காக, நேற்று மட்டக்களப்பைச் சென்றடைந்தார்.**

விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்ட தமிழ்ச்செல்வன், நேற்று முற்பகல் 11 மணிக்கு மட்டக்களப்பு - இலுப்பையடிச்சேனை பொதுவிளையாட்டரங்கைச் சென்றடைந்தார்.

இவரை - விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா அம்மான் மற்றும் தளபதிகளான ராபர்ட், ராம் ஆகியோர் மைதானத்தில் வைத்து வரவேற்று, அழைத்துச் சென்றனர்.

ஒருவார கால விஜயம் ஒன்றை மேற்கொண்டு கிழக்கு மாகாணத்துககுச் சென்றுள்ள தமிழ்ச்செல்வன், இன்று அல்லது நாளை திருகோணமலைக்கும் செல்லவிருக்கிறார்.

குரங்குப்பாஞ்சானில் புலிகளின் பயிற்சி முகாம் தொடர்பான சர்ச்சைகள் குறித்தும், தமிழ்ச்செல்வன் நேரடியாக ஆராயவுள்ளதாகத் தெரிய வருகிறது.

அதேவேளை - கிழக்கு மாகாணத்திலுள்ள போராளிகள் மற்றும் பிரமுகர்கள் பலருடனும், கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைகுறிதது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கடன் அட்டை மோசடி ஐந்து தமிழர்கள் லண்டனில் கைது!

கடன்அட்டை மோசடியில் ஈடுபட்டதாகச் சந்தேகித்து, ஐந்து இலங்கைத் தமிழர்கள் - லண்டனில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட ஐவரில் ஒருவர் பெண் எனவும் மற்றைய நால்வரும் ஆண்கள் எனவும் தெரியவருகிறது.

கடந்த சில வருடங்களாக இவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த இராணுவத் தளபதி லோஹான் குணவர்த்தன!

அடுத்த இராணுவத் தளபதியாக, மேஜர் ஜெனரல் லோஹான் குணவர்த்தன நியமிக்கப்படவுள்ளதாக - ஜனாதிபதி செயலகத்துக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது இராணுவத் தலைமை அதிகாரியாகப் பதவி வகிக்கும் மேஜர் ஜெனரல் லோகான் குணவர்த்தன, அடுத்த மாதம் இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்கலாம் எனவும் தெரியவருகிறது.

தற்போதைய இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல, அடுத்த மாதம் ஓய்வுபெறவுள்ளதாலேயே, இந்தப் பதவிக்கு மேஜர் ஜெனரல் லோஹ ான் குணவர்த்தன நியமிக்கப்படவுள்ளார்.

இதேவேளை - இராணுவத்தின் பிரதித் தலைமை அதிகாரியாகக் கடமை புரியும் மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவும் அடுத்த மாதம் ஓய்வுபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மாகாண தமிழ்த்தின விழா நேற்றுடன் நிறைவு பெற்றது!

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்த்தின விழாவின் இறுதிநாளான நேற்று, நாட்டுக்கூத்து நிகழ்வு யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

நேற்று மாலை 4 மணியளவில், மேலதிக கல்விப்பணிப்பாளர் இராசையா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

நிகழ்வின் ஆரம்பத்தில், பிரதம விருந்தினர் செ.பத்மநாதன், வட - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் மற்றும் கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோர் - பெரியபுலம் மகாவித்தியாலய மாணவர்களின் கீழைத்தேய வாத்தியக் கருவிகளின் இசையுடன் மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் உரை நிகழ்த்துகையில்,

வடக்கு - கிழக்கு மாகாண சபை ஏற்படுத்தப்பட்ட பின்னர், முதற் தடவையாக மாகாண தமிழ்த்தின விழா யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்றது. இது மகிழ்ச்சிக்குரியது.

யாழ்ப்பாண கல்விச் சமூகத்தை

(10 ஆம் பக்கம் பார்க்க)




## ஜே.வி.பி. - பொ.ஐ.மு. கூட்டணி: பேச்சுக்கள் முறிவடையும் கட்டத்தில்!

### நிலைமையை சுமுகமாக்க ஃபேரியல் அஷ்ரப்பை நாடுகிறார் சந்திரிகா

பொதுஜன. ஐக்கிய முன்னணிக்கும் - ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணிப் பேச்சுவார்த்தைகள், முறிவடையும் கட்டத்துக்குச் சென்றிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனாலும், தற்போதுள்ள அரசாங்கத்தை அகற்றுவதற்கு, பொதுஜன ஐக்கிய முன்னணி மேற்கொள்கின்ற நடவடிக்கைகளுக்கு, தமது கட்சி உதவி செய்யுமென, ஜே.வி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுபற்றி ஜே.வி.பி. வட்டாரங்கள் மேலும், தெரிவிக்கையில், பொதுஜன ஐக்கிய முன்னணியுடனோ, அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனோ, ஒரு கூட்டணி அமைக்க முடியாவிட்டாலும், தற்போதுள்ள அரசாங்கத்தை பதவியிலிருந்து விலக்குவதற்கு, ஜே.வி.பி. எவ்வகையான

(10 ஆம் பக்கம் பார்க்க)

### இடைக்கால நிர்வாகச் சர்ச்சை தொடர்கிறது

## ரணிலை சந்திப்பதற்கு சந்திரிகா பின்னடிப்பு!

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகத் திட்டவரைபு தொடர்பாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள சந்தேகங்களைத் தீர்க்கும் நோக்கில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியை நேரடியாகச் சந்தித்து, விளக்கமளிக்க இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டபோதும் -

இந்த வாரத்தில் ஜனாதிபதிக்கு அதிக அலுவல்கள் இருப்பதாகத் தெரிவித்து, சந்திப்புக்கான நேரம் ஒதுக்கப்படவில்லை என, ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

எனினும், இந்தச் சந்திப்பு - அடுத்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பினருடனான சந்திப்பு ஒத்திவைப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் இன்று கிளிநொச்சியில் நடைபெறவிருந்த சந்திப்பு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான இந்தச் சந்திப்பு, எதிர்வரும் 5 ஆம் திகதிக்குப் பின்னரே இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -1139)

# 24 மணிநேரத் தேடுதல்களில் 92 பேர் கொழும்பில் கைது!

(கொழும்பில்)

கொழும்பில் இருபத்தினான்கு மணி நேரத்தில் நடத்தப்பட்ட தேடுதல் மற்றும் சுற்றிவளைப்பின்போது, 92 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நேற்றுமுன்தினம் காலை 6 மணிமுதல், நேற்றுக்காலை ஆறு மணிவரை இந்தத் தேடுதல் நடத்தப்பட்டதாக கொழும்பு பிரதிப்பொலிஸ் மா அதிபர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் 149 சோதனை மற்றும் 57 ரோந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன், இராணுவத்தினருடன் இணைந்து 13 வீதிச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும்- அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்கவும்

புத்தூர் சந்திக்கும் சாவகச்சேரிக்கும் இடையில், நேற்று மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் தொலைந்துவிட்டதாகவும் இவற்றைக் கண்டெடுத்தவர்கள் - சாவகச்சேரி அரசியற்துறைச் செயலகத்தில் அல்லது யாழ்.மாவட்ட அரசியற்துறை செயலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.


நிறைஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், பிரியங்கா, விவேக் நடித்த

காதல் சடுகுடு

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

THE MUMMY

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சி-1138)

ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த A.V.M இன்



10.30, 2.30, 6.30, 9.30

ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம். (சி-1137)

இயக்கம்: விக்ரமன்


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1934 . 12 . 27



மறைவு 1997 . 08 . 03

### அமரர் வீரகத்தி இராசதுரை (பூச்சி)

*அன்பால் எமைக்காத்து ஆசையால் எமை வளர்த்து*
*பூவுலகில் சிறக்கவைத்த எம் தெய்வமே!*
*சீராக நாம் வாழும் காலமதில் எம்சிறப்பைக்*
*காணாது சென்றனையோ?*

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*முத்தமிழ் வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.*

(435)

மனைவி, பிள்ளைகள்.

## பனை தென்னை வள தொழில்நுட்ப சான்றிதழ் கற்கைநெறி

### Certificate Course in Palm Resource Technology

யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தினால் நடாத்தப்படவுள்ள மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தமிழ் மொழிமூலமாக நடாத்தப்படவுள்ள மேற்படி கற்கை நெறியானது விரிவுரைகள், செய்முறைகள் மற்றும் பனை தென்னைவளம்சார் ஆராய்ச்சி, உற்பத்தி தொடர்பான நிறுவனங்களுக்கான கல்விச் சுற்றுலாக்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. மேலும் இக்கற்கை நெறியில் ஆங்கிலம் மற்றும் கணினிப் பயிற்சி என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறியை நிறைவுசெய்யும் மாணவர்கள், பனை தென்னை வளங்கள், அதன் உற்பத்தி, பராமரிப்பு பயன்பாடுகள் மற்றும் உற்பத்தி பதனிடல் சம்பந்தமான தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இக்கற்கை நெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இரண்டு அரையாண்டுகளை உள்ளடக்கியுள்ள ஒரு வருடக் கடற்கை நெறியாக இது அமையும்.

கற்கைநெறிக் கட்டணம் ரூபா 20.000

வயது :45 வயதிற்கு உட்பட்டோர்

**கல்வித் தகைமைகள்**

க.பொ.த (உ/த) உயரியல் விஞ்ஞானத்தில் மூன்று பாடங்களில் சித்தி

*அல்லது*

க.பொ.த (சா/த) பரீட்சையில் விஞ்ஞான பாடத்தில் நிறமைச் சித்தியுடன் பரீட்சையில் சித்தி.

*அல்லது*

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் தத்தமது அதிகாரியினால் சிபாரிசு செய்யப்படுமிடுமிடத்து விசேட அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தெரிவு:** நேர்முகப் பரீட்சை மூலம் நடைபெறும்.

விண்ணப்பப் படிவங்களை நேரிலோ, அல்லது சுயமுகவரியிடப்பட்டு ரூபா 4.50 பெறுமதியுடைய தபால் தலைகள் ஒட்டப்பட்ட கடித உறைகளை அனுப்பியோ பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 29.08.2003 மாலை 3.00 மணிக்கிடையில் **பீடாதிபதி, விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு நேரிலோ, தபால் மூலமாகவோ ஒப்படைக்க வேண்டும்.

தாமதமான மற்றும் முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

27.07.2003 (சி-1275)

# இலங்கை அரசு
# வடக்கு கிழக்கு மாகாண சபை

## வடக்கு கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
## கடன் இல - 2880 சி.இ. (C.E)
## தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்
## (நிர்மாண வேலைகள்)
## கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி (I.F.B)

ஐஎவ்பி இல: கேஎன்/நீர்ப்/சிஎல்ஜி/01 திகதி: 25.07.2003

01. வடக்கு கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடன் ஒன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மான வேலைக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒருபகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின்கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி (IBRD) கடன் வசதி ஐ.டீ.ஏ (I.D.A) நம்பிக்கையின் மீதான வசதி

02. மாவட்டச் செயலாளர், கிளிநொச்சி, இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

03. மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது கிளிநொச்சியில் மாற்றத்தக்கதான கிளிநொச்சி மாவட்டச் செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி அவர்களிடமிருந்து 28.08.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்**
**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்**
**கிளிநொச்சி.**

05. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் கிளிநொச்சி மாவட்டச் செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 29.08.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன் கையளிக்கப்படல் வேண்டும்.

**தலைவர் (துரித மீளமைப்புத் திட்டம்)**
**கேள்விச்சபை,**
**மாவட்டச் செயலகம்,**
**கச்சேரி, கிளிநொச்சி.**

அதேதினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாளன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

06. வேறு விபரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

### அட்டவணை

| கேள்வி குறியீட்டு இல | வேலை விபரம் | கேள்வி பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை நிறைவேற்றப்படவேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| கேஎன்/நீர்ப்/சிஎல்ஜி/சிபி 01 | பி.உ.உ.ஆ. அலுவலகக் கட்டடம் மீள் நிர்மாணம் | 90,000.00 | 800.00 | 10 மாதங்கள் |
| கேஎன்/நீர்ப்/சிஎல்ஜி/சிபி 02 | பூநகரி பி.ச.காரியாலய கட்டடம் மீள் நிர்மாணம் | 90,000.00 | 800.00 | 10 மாதங்கள் |
| கேஎன்/நீர்ப்/சிஎல்ஜி/சிபி 03 | கிளிநொச்சி பி.ச ரூ நகர மண்டபம் கட்டடம் மீள் நிர்மாணம் | 170,000.00 | 800.00 | 12 மாதங்கள் |
| கேஎன்/நீர்ப்/சிஎல்ஜி/சிபி 04 | பச்சிலைப்பள்ளி பி.ச. கட்டடம் மீள் நிர்மாணம். | 90,000.00 | 800.00 | 10 மாதங்கள் |

07. கேள்விதாரர்கள், கேள்விதாரர்களுக்கான செயற்பிரமாணக் குறிப்புக்கள் நான்காம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளின் ஆகக்குறைந்த தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக் கேள்வி விளம்பரத்திலுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும் ஆளணியும் அனுபவமும் இருப்பது ஒரு தனி ஒப்பந்தத்திற்கு தேவைப்படும் தகைமைகளைத் திருப்திப்படுத்துவதாக வேண்டும்.

**தி.இராசநாயகம்,**
மாவட்டச் செயலாளர், அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்

(சி-1276)

# மஹிந்தவை விடக் கூடுதல் செல்வாக்கு தனக்கு இருப்பதாகக் கூறுகிறார் அனுரா!



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி.யுடன் கூட்டுச்சேர்வது உறுதி. கூட்டுச் சேர்ந்த பின்னர், ஐ.தே.கட்சி அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதை எவராலும் தடுக்க முடியாது என்று, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

ஐ.தே.கட்சியில், 1994 ஆம் ஆண்டு நான் இணைந்தவுடன், அக்கட்சி தேர்தலில் தோல்வியுற்றது. 2001 ஆம் ஆண்டு பொ.ஐ.முவுடன் இணைந்த போது, அக்கட்சி தேர்தலில் தோல்வியடைந்தது.

சபாநாயகராக இருந்தபோது, நான் வெறுத்த அரசியற்கட்சி ஜே.வி.பி.தான். விஜேவீர போன்றவர்கள் இப்போது ஜே.வி.பியில் இல்லை. ஆனால், தற்போது ஜே.வி.பியில் இருப்பவர்கள் படித்த புதிய சிந்தனையாளர்கள். எதிர்காலத்தில் நான் ஜனாதிபதி வேட்பாளராக வரமுடியும் என்று கூறமுடியாது.

ஜே.வி.பி.யுடன் உடன்படிக்கை கைச்சாத்தாகிய பின்னர் - எல்லோரும் சேர்ந்துதான் முடிவெடுக்க வேண்டும். அதற்கு இன்னும் இரண்டரை வருடங்கள் ஆகும். அதற்கிடையில் புலிகள் யுத்தத்தைத் தொடங்கி, யார் யாரைக் கொலை செய்வார்கள் என்பதைக் கூறமுடியாது.

மஹிந்த ராஜபக்ஷவைவிட அதிக வாக்குகளை என்னால் பெறமுடியும். அதற்கு நான் ஜே.வி.பி.யின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன்.

ஆரம்பத்திலிருந்து ஐ.தே.கட்சியையும், சுதந்திரக் கட்சியையும் இணைத்து தேசிய அரசாங்கம் அமைக்க முயற்சி செய்தேன். அது கைகூடவில்லை. அது நாட்டின் துரதிர்ஷ்டம். மக்களுக்கு இரு பிரதான கட்சிகளையும் வெறுத்துவிட்டது. அதேவேளை, ஜே.வி.பிக்கு மக்கள் ஆதரவு உண்டு என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எனக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. நான் அவருடன் இணைந்து செயற்படத் தயார். ஜனாதிபதித் தேர்தல் வந்தவுடன் கருத்துக் கணிப்பு நடத்தி வேட்பாளரைத் தேர்வு செய்யவேண்டும்.

எதிர்காலத்தில், ஜனாதிபதியாகப் பிரபாகரன்கூட வரலாம். நாம் எதையும் நிச்சயமாகக் கூறமுடியாது. ஒன்றுபட்ட இலங்கைக்குள் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்தால்- இடைக்கால நிர்வாகசபை பற்றிப் பேசுவதற்கு ஜனாதிபதி இணக்கமாகவுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசு ஏமாற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது. இதனால் ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்த அரசை வீட்டுக்கு அனுப்பிவிடுவோம். இப்போது மக்கள் பலம் எமக்கு உள்ளது என, அவர் மேலும் தெரிவித்தார்.

## சிங்கள மக்களுக்கு ஆயுதம் கொடுக்குமாறு அதாவுல்லா கோரிக்கை!

வடக்கு - கிழக்கு இணைந்த நிர்வாகம், தமிழீழ விடுதலைப் புலிகளிடம் மட்டும் கொடுக்கப்படக்கூடாது என, அஷ்ரப் காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளிடமிருந்து முற்றுமுழுதாக ஆயுதங்கள் களையப்பட வேண்டும். அவ்வாறு ஆயுதங்கள் களையப்படாது விட்டால், சகல சிங்கள மக்களுக்கும் ஆயுதங்கள் வழங்கப்படவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

## பொலிஸ் திணைக்களத்தில் 12 ஆயிரம் வெற்றிடங்கள்

பொலிஸ் திணைக்களத்தில் சுமார் 12 ஆயிரம் பொலிஸாருக்கு வெற்றிடங்கள் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், பொலிஸ் திணைக்களத்தில் நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பெருஞ்சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகத்தின் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாட்டில் தினந்தோறும் அதிகரித்துவரும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு, பொலிஸ் அதிகாரிகள் பற்றாக்குறை முக்கிய தடையாகவுள்ளதென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

பொலிஸ் கொன்ஸ்டபிள்களுக்கான வெற்றிடங்களே, அதிகமாக உள்ளன என்றும், அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் விழிப்பூட்டுவது பத்திரிகையாளர்கள் பணி!

### பேராசிரியர் சிற்றம்பலம் வலியுறுத்து

"யாழ்ப்பாணத்தில், மக்கள் அரசியல் மயப்படுத்தப் படுத்தப்படவில்லை. உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் நடைபெறும் போராட்டத்தில் - மக்களை விழிப்படையச் செய்வதும், இதயசுத்தியுடன் செயற்பட வைப்பதும் பத்திரிகையாளர்களின் பணியாகும்."

- இவ்வாறு பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் தொடர்பயிற்சித்திட்ட பயிலரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'தமிழ் பத்திரிகைகளும், தமிழ் கலாசாரமும்' என்ற பொருளில் அவர் கருத்துரையாற்றினார்.

தமிழர்கள் ஆரம்பத்தில் பிரிவினை கோர முற்படவில்லை. தேசியம் பேணவே முற்பட்டார்கள். தமிழர்கள்-சிங்களவர்களுடன் இணைந்து தேசியம் பேண முற்பட்ட போது - பல்வேறு வகைகளில் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

தமிழ்மொழி ஒதுக்கப்பட்டு, தனிச்சிங்களம் அமுல் செய்யப்பட்டபோது - அவற்றை மனந்திறந்து கதைத்தவர்கள், புலிகள் என்று முத்திரை குத்தப்பட்டனர்.

தேசிய ரீதியில் தமிழ் ஒதுக்கப்பட்டபோது, அவை பேணப்படவேண்டும் என்ற கருத்துநிலையை ஏற்படுத்த தமிழ்ப் பத்திரிகைகள் முன்வரவில்லை.

தமிழர் தொடர்பான அரசியல் தீர்மானங்களை எடுக்கும் உரிமையை ஆரம்பத்தில் அரசியல்வாதிகளும், தற்போது விடுதலைப் புலிகளும் பெற்றிருக்கிறார்கள்.

பல்வேறு கட்டங்களில் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றபோதிலும், அப்பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்காமல் போயுள்ளன. அரசியல் பேச்சுவார்த்தை மேசையில், பெரும்பான்மையினர் தமது நலன்களைப் பேணும் வகையில் செயற்பட்டமையே இதற்குக் காரணமாகும்.

இலங்கையில் ஒற்றையாட்சி முறை நிலவியுள்ளது என்பது கட்டுக்கதையே. பிராந்தியங்களின் கட்டமைப்பு ஆட்சியையே இலங்கை கொண்டிருந்தது. இதற்கு வரலாற்றுச் சான்றுகளும் உள்ளன.

தமிழ்த்தேசிய வரையறை, கட்டுமானப் பணிகளில், மக்களை விழிப்படையச்செய்து, அவர்களை வெறும் பார்வையாளர் அல்லாமல், அவர்களையும் பங்காளர்களாக்க வேண்டியது பத்திரிகைகளின் தலையாய பணியாகும்.

கலாசாரத் தனித்துவம் என்பது அரசியலிலே தங்கியுள்ள காரணத்தால், அரசியல் ரீதியாக மக்களை விழிப்படையச் செய்வது அவசியமானது.

ஒரு சமுகத்தில் கல்வி என்பது - சுதந்திரம் கிடைத்த பின்னர் - அதை நிர்வாகம் செய்ய, ஆட்சிபுரியக் கூடியதான வகையில் அமையவேண்டும்.

கல்விக்கும் வாழ்க்கைக்கும் இடையே இருக்கும் தொடர்பில்லாத போக்கை மாற்றி - கல்வியையும், வாழ்கையையும் இணைக்கும் வகையில், கல்வி வழங்கப்பட வேண்டும்.

- என்று பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் மேலும் தெரிவித்தார்.

# சிறிய சைக்கிள் உதிரிப்பாகங்களைக்கூட எமது நாட்டில் தயாரிக்க முடியவில்லை!

### நாடாளுமன்றத்தில் டி.எம்.ஜெயரட்ண

(கொழும்பு)

நாட்டில் எத்தனையோ பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் இருந்தும் - சிறிய சைக்கிள் உதிரிப்பாகம் ஒன்றைக்கூட தயாரித்துக் கொள்ளும் அளவுக்கு நாம் முன்னேறவில்லை என்று, நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார் பொ.ஐ.முவின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.ஜெயரத்ன.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற புலமைச்சொத்துத் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு பேசியபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வறிய நாடுகளிலுள்ள ஒருவர், ஒரு ஆக்கபூர்வமான செயற்பாட்டை மேற்கொண்டால், அதற்கான பிரசாரத்தை அவரால் மேற்கொள்ளமுடியாது போகிறது. இதனால், அவர் தனது திறமையை விற்கவேண்டியுள்ளது.

நெல் உற்பத்தி தொடர்பான இயந்திரம் ஒன்றை மாவனெல்லை இளைஞர் ஒருவர் தயாரித்தார். ஆனால், அவரை ஊக்கமளித்து முன்னேற்ற அரசாங்கம் தவறியுள்ளது.

இத்தகைய நிலைமைகளால்தான், எமது நாட்டில் எந்தவொரு உற்பத்தியையும் மேற்கொள்ள முடியாது போய்விட்டது என்று, அவர் மேலும் குறிப்பிட்டார்.




தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற, வடக்கு - கிழக்கு மாகாண பொதுசன நூலகர்களுக்கான பயிற்சிப்பட்டறையில் கலற்துகொண்ட தேசிய நூலக ஆவணமாக்கல் சபைத் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ காரியவாசம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

# விமானத்தில் குழப்பம் விளைவித்த இரு நபர்கள் கைதாகி நீதிமன்றில்

கட்டுநாயக்க விமானநிலையத்திலிருந்து நேற்று அதிகாலை பாங்கொங் நோக்கிப் புறப்படவிருந்த விமானத்தில், இருநபர்கள் குழப்பம் விளைவித்ததால், அந்த விமானம் சுமாா ஒரு மணித்தியாலயம் தாமதமாகவே புறப்பட்டுச்சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விமானத்தில் குழப்பம் விளைவித்த இரண்டு நபர்களையும் பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

# சமாதான முயற்சிகள் குறித்து மக்களின் கருத்தறிய முயற்சி!

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக, அரசாங்கம் - பொதுமக்களின் அபிப்பிராயங்களைக் கோரவுள்ளதென அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே, அமைச்சர் பீரிஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் தொடர்ந்து யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருகின்றது. இந்த யுத்த நிறுத்தத்தைத் தொடாந்து கடைப்பிடிக்கப்பட வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கம் தன்னிச்சையான முறையில் சமாதான முயற்சிகளை மேற்கொள்ள விரும்பவில்லை என்றும், அவர் மேலும் குறிப்பிட்டார்.

# திருமலையில் புலிகளின் ஒத்துழைப்புடன் காணி அமைச்சின் இடம்பெயர் சேவை!

### அமைச்சர் ராஜித சேனாரத்ன தகவல்

திருகோணமலையில், காணியமைச்சின் இடம்பெயர்சேவை, விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புடன் விரைவில் நடத்தப்படும் என்று, காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் காணியமைச்சின் இடம்பெயர்சேவை நடத்தப்படவிருந்தபோதும் அது பிற்போடப்பட்டது. இதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் ராஜித சேனாரத்ன,

விடுதலைப் புலிகளுடன் கலந்தாலோசித்து, அவர்களின் ஒத்துழைப்புடன் காணி அமைச்சின் இடம்பெயர்சேவையை விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். இது தொடர்பாக, திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக்குடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமலை மாவட்டத்தில் தமிழ் சிங்கள, முஸ்லிம் மக்களின் காணிகள் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் வகையில், புலிகளுடன் இணைந்து இடம்பெயர்சேவை நடத்துவதே பொருத்தமானதாக இருக்குமென்றும், காணியமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார். (01)

# இந்திய வெளியுறவு அமைச்சர் அடுத்த மாதம் இலங்கை வருகை

இலங்கை - இந்தியக் கூட்டு ஆணைக்குழுவின் முக்கிய கூட்டமொன்றிற்காக - இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா, அடுத்த மாதம் கொழும்பு வரவுள்ளார். அடுத்த மாதம் 18 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இந்த ஆணைக் குழுவின் கூட்டத்திற்கு வரும்படி - வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ விடுத்த அழைப்பை அவா ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்த ஆணைக்குழு - இலங்கை இந்திய நாடுகளுக்கிடையிலான பொருளாதார உறவை வளர்க்க மேலும் உதவுமென, ரிரோன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

கொழும்பு வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவுடனான பேச்சுக்களில் - வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோவும், வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்கவும் முக்கிய பங்கேற்பர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - இந்திய வெளியுறவு அமைச்சர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்திப்பார் என, அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

# வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

**வாக்கிய பஞ்சாங்கப்படி குரு பகவான் கடக ராசியிலிருந்து, சிம்ம ராசிக்கு கடந்த 23ஆம் திகதி.6.29 மணிக்கும், திருக்கணித பஞ்சாங்கப்படி எதிர்வரும் 30 ஆம் திகதி பகல் 12.03 மணிக்கும் இடம்பெயர்கிறார். இவர் 15.08.2004 வரை இந்த ராசியில் இருப்பர். இதையொட்டி 12 ராசிகளுக்கும் உரிய பலன்கள் தொடர்ச்சியாகத் தரப்படுகின்றன.**





## சிம்மம்

(மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்)

இந்தக் குருபெயர்ச்சி உங்களுக்கு உயர்வான பலன்களைத் தரும். இந்த ஆண்டு உங்களுக்கு யோகப் பலன்கள் மிகுதியாக இருக்கும்.

முக்கியமான கிரகங்களின் சஞ்சார நிலை, உங்களுக்கு மிகமிகச் சாதகமான நிலைமைகளில் அமைந்துள்ளன.

பொருளாதாரத்தில், நீங்கள் இமயத்தின் உச்சிக்குச் செல்லும் ஆண்டு. இந்த ராசியின் வியாபாரிகளுக்குப் பொருளாதாரம் உன்னதமாகச் சிறக்கும். அரசு அதிகாரிகள் நினைத்தபடி பதவி உயர்வு பெறுவீர்கள். திருமணத் தடைகள் இருந்தால், அவை நீங்கும். சிறந்த, உயர்ந்த இடங்களில் திருமணங்கள் உறுதியாகும்.

அரசியல்வாதிகள் புகழ்பெறும் காலம். பட்டம் பதவிகள் தேடிவரும். ஏற்கனவே பதவி இழந்தவர்கள், இழந்த பதவியைப் பெறுவார்கள்.

குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். கணவன் - மனைவி இருவரும் அன்றில் பறவைகள் என இணைந்து இனிமையாக வாழ்வீர்கள்.

மாணவர்கள் உயர்கல்வியை விரும்பிய துறையில் பெற இது நல்லகாலம்.

சிலருக்குப் புதிய சொத்து, புதிய வண்டி, வாகனச் சேர்க்கை ஏற்படும். சிலர் முன்னோர் சொத்துக்களை விற்றுப் பெரும் இலாபம் அடைவீர்கள். மேலும், அதன்மூலம் பல புதிய சொத்துக்கள் வாங்குவீர்கள்.

அரசாங்கத்தின் உதவி அதிகமாகி வாகன யோகம் பெருகும். அரசு வாகனங்களில் பவனி வருவீர்கள். பெருந்தன்மையான குணங்கள் தோன்றும். நுண்மையான அறிவுக் கூர்மை தோன்றும்.

நன்றி மறவாதவர்கள். பிறர்க்கு உதவி செய்யவேண்டும் என்ற எண்ணம் தோன்றும். தெய்வ நம்பிக்கை மேலோங்கும். நாணயம், நம்பிக்கைக்கு ஒருவர் என்று உலகம் உங்களைப் பாராட்டும். உங்கள் தோற்றத்தில் ஒரு தெய்வீக அழகு தோன்றும். உயர்மட்டத்தில் இருப்போரின் நம்பிக்கைக்கு உகந்தவர் ஆவீர்கள்.

இனிப்பில் உங்களுக்கு விருப்பம் தோன்றும்.

இந்த ராசிப் பெண்கள் தற்போதுள்ள சூழலைவிட உயர்வார்கள். நல்ல தோழிகள் கிடைப்பார்கள். கெட்ட பெண்கள்கூட உங்களோடு சேர்ந்தால், திருந்திவிடுவார்கள். வேலைக்குச் செல்லும் பெண்களுக்குச் சுமாரான வருமானம் கிடைக்கும். சுயதொழிலில் ஈடுபட ஏற்றநேரம். கணவரிடம் சொல்லி, உங்கள் பெயரில் அவர் நடத்தி வரும் தொழிலை மாற்றினால் உயர்வு கிட்டும். நல்லநேரம் காரணமாக - ஆடை, ஆபரணச் சேர்க்கைகள் பெருகும். தங்கநகையை அணிந்துகொண்டு, சக தோழிகளைக் கலக்கிவிடுவீர்கள்.

### ஆடி

வெளியூர் செல்லும் வாய்ப்புக்கள் ஏற்படும். சில காரணங்களால் பிறந்த ஊரை விட்டு, வெளியூரில் குடியேற நேரிடும். மனைவியின் சொல்லே உங்களுக்கு மந்திரம். கண்ணில் கோளாறுகள் தோன்றும். தக்க கண் மருத்துவரை அணுகுங்கள்.

### ஆவணி

உயர்கல்வியில் எண்ணம் தோன்றும். உயர் பண்புகள் பொங்கி எழும். நீங்களே வியக்கும் விதத்தில் உங்கள் புத்திக்கூர்மை மேலோங்கும். எண்ணுவது எல்லாம் ஈடேறும். இன்ப உணர்வுகள் மேலோங்கும். உடல் வன்மை பெறும். கலைகளில் ஈடுபாடு தோன்றும். நுண்கலைகளை வளர்ப்பீர்கள். அலங்காரப்படுத்திக் கொள்வதில் ஆர்வம் கட்டுக்கடங்காது இருக்கும். சிலர் பெருந் தொழிலதிபர்கள் ஆவார்கள்.

### புரட்டாதி

சிலருக்கு முகத்தில் பருக்கள், கட்டிகள் தோன்றும். சிலருக்குப் பேச்சாற்றல் பெருகிச் சிறக்கும். உங்களில் சிலருக்கு மொழி இலக்கணங்களில் ஈடுபாடு தோன்றும். ஆனால், அளவு கடந்து செலவு செய்ய எண்ணுகின்றீர்கள். சிலருக்குக் கண் கோளாறினால் கண்ணாடி அணியும்படி இருக்கும். உண்மைகள் பேசுவீர்கள். காரியவாதி ஆவீர்கள். பெரும் குடும்பங்களைக் காப்பீர்கள். நீங்கள் எழுத்தாளரானால், நாவல்கள் படைப்பீர்கள். சுவைமிக்க கவிதைகள் புனைவீர்கள்.

### ஐப்பசி

சிலருக்குத் தகவல் தொடர்பு சாதனங்கள் கைகூடும். தகவல் தொடர்புத் துறையில் அரசுப் பணி கிடைக்கும். துரதிர்ஷ்டவசமாகத் தந்தையரின் அந்திமக் காலங்களில் அருகில் இல்லாமல் இருக்கும்படி நேரிடும். தந்தையரைவிட புகழ் அதிகம் பெறுவீர்கள். உணவைவிடச் சிற்றுண்டிகளில் கவனம் செல்லும். கொள்கையில் உறுதிப்பாடு தோன்றும். வாழ்வில் வசதிகள் பல பெற்றதாக இருக்கும். குள்ளநரித் தந்திரங்கள் பல செய்வீர்கள். மற்றவர்களுக்கு ஒரு மாயாவிபோல் தோன்றுவீர்கள்.

### கார்த்திகை

துணிவு, நம்பிக்கை பெருகும் மாதம். பிரயாணங்கள் அடிக்கடி ஏற்படும். இவற்றுள் சில தண்டச் செலவுகளாக இருக்கும். சில பிரயாணங்களில் விபத்துக்கள் தோன்றும். ஆனாலும் உயிருக்குப் பயமில்லை.

### மார்கழி

உங்களில் சிலருக்குப் பட்டக் கல்வி யோகமுண்டு. மேன்மேலும் கல்வியில் உயர வழிகள் பிரகாசமாகும். அறிவுக்கூர்மை, நுண்மையான அறிவு தோன்றும். எடுத்த துறை எதுவாயினும் அதில் முதன்மை பெறுவீர்கள்.

### தை

சிலருக்கு மருத்துவக் கல்வியில் ஈடுபாடு தோன்றும். சிலர் இந்தியப் பாரம்பரிய வைத்தியமுறையில் ஆராய்ச்சிகள் செய்ய முற்படுவார்கள். உங்கள் வாழ்விற்கு ஆன்மீகந்தான் உகந்தது.

### மாசி

உங்கள் மனைவிக்குக் குறுகிய எண்ணம் தோன்றும். பிறர்க்கு உதவுவதை விரும்பமாட்டார்கள். சிலரின் மனைவிமாருக்கு அரசுப்பணிகள் கிடைக்கும். திருமணமாகாதவர்களுக்கு இம்மாதத்தில் திருமண வாழ்வு அமைந்தால், உங்களைவிட மேலோங்கிய அழகுள்ள மனைவி அமைவாள். கூட்டுத்தொழில்கள் ஒத்துவராது. உங்கள் மனைவியின் பேரில் சொத்துக்கள் சேர்ப்பீர்கள். தம்பதியரின் ஒற்றுமை நீரும் நீரும் சேர்ந்தாற்போல் இணைந்து இருக்கும்.

### பங்குனி

ஆயுதங்களால் காயங்கள் தோன்றலாம். உஷ்ணம் தொடர்பான கட்டிகள், பருக்கள், உடைந்து சீழ் வரும். கட்டிகள், உஷ்ணபேதி என இவற்றிலொன்று தோன்றும். சிலருக்கு அரசின் வழக்குகளைச் சந்திக்கும் அவலம் தோன்றும். உஷ்ணத்தில் சிறுநீர்க் கோளாறுகள் தோன்றலாம்.

### சித்திரை

தகப்பனாரின் உடல்நலம் பாதிக்கப்படும். சிலநேரங்களில் உங்கள் செயல்களுக்கு நீங்களே வருத்தப்படுவீர்கள்.

### வைகாசி

அம்பிகை வழிபாடுகளில் எண்ணம் செல்லும். பெண்களின் மீது இச்சை அலைபாயும். பசுச் செல்வத்தால் வளம் பெறலாம். திருமணமாகாதவர்களுக்கு அழகான மனைவி அமைவார்.

### ஆனி

பகைவர்கள் வீழ்ந்துவிடுவார்கள். வீண் விரயங்கள் அழிக்கப்படும். எண்ணிய காரியங்கள் நிறைவேறும்.

(நாளை கன்னி தொடரும்)

# சைவ பரிபாலன சபை நடத்திய பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினால் - 2003 ஆம் ஆண்டு, வைகாசி மாதத்தில் நடத்தப்பட்ட சைவசித்தாந்த பிரவேச பால பண்டிதர், பண்டிதர் ஆகிய தேர்வுகளின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இத்தேர்வுகளில் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு -

***சைவ சித்தாந்த பிரவேச பண்டிதர்***

செல்லப்பு திருவிளங்கம் (அராலி)

***சைவ சித்தாந்த பால பண்டிதர்***

சசிலேகா கனகசுந்தரம்பிள்ளை (பருத்தித்துறை)

**சைவசித்தாந்த பண்டிதர்**

கிருஷ்ணபிள்ளை கந்தவேள் (சாவகச்சேரி ), கதிரமலை கவிதா (கோண்டாவில்), குமாரசாமி சுமுகலிங்கம் (பூநகரி), கலைச்செல்வி கந்தசாமி (சுழிபுரம்) துளசிமலர் வைத்தி (சாவகச்சேரி) நாகறஜனி முருகையா (புத்தூர்) சு.புஸ்பறேகா (நீர்வேலி).

## அடையாள அட்டை கண்டெடுப்பு

பாலியாறு விநாயகபுரத்தைச் சேர்ந்த நகுலேஸ்வரன் என்பவருடைய - கிராம அலுவலரால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை மற்றும் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு பயணச்சிட்டை என்பன கண்டெடுக்கப்பட்டு, 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(ஆழியவளை)

பொ.ஐ.முருகானந்தம் ஞாபகார்த்தமாக - வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையால், பாடசாலை மாணவர்களுக்கு இடையே உதைபந்தாட்டப் போட்டியும், பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி, நாளை செவ்வாய்க் கிழமை வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதான உத்தியோகத்தர் முகுந்தன் தெரிவித்துள்ளார்.

(122)



**2002, 2003 ஆம் ஆண்டுகளில், 16வயதிற்குட்பட்ட கிரிக்கெட் போட்டியில் - மாவட்ட மட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சாம்பியனானதையிட்டு, அதன் பயிற்றுவிப்பாளர் உதயணனைப் பாராட்டி, கல்லூரி சமூகத்தால் தங்கப்பதக்கம் அளித்து கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம். (46)**

# ஆங்கில ஆசிரியர்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது!

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலைகளில் - தரம் மூன்று முதல் எட்டு வரையான வகுப்புகளில் ஆங்கிலம் போதிப்பதற்கு, கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் அதிவிசேட சித்தி பெற்றவர்கள் அல்லது ஆங்கில டிப்ளோமாவில் சித்தி பெற்றவர்களிடமிருந்து, விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆங்கிலம் போதிக்க ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ள பாடசாலை அதிபர்களிடம், இந்த விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கமுடியும். இவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அல்லது பழைய மாணவர் சங்கம் வழங்குமென, மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (101)


## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : ஜெ.விதுஷிகா
முகவரி: பொலிகண்டி வல்வெட்டித்துறை.

இரண்டாவது அகவையில்



பெயர் : சி.கௌதமி
முகவரி: 03, ஸ்ரான்லி கல்லூரி ஒழுங்கை.

இரண்டாவது அகவையில்

பெயர் : சி.திலக்ஷிகன்
முகவரி: இல.14, விதானையார் வீதி, சுண்டுக்குளி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



------------------------
பெற்றார் ஒப்பம்

# இலக்கியச்சோலை

## நாவல்

# எனது ஊரிலும்தான்

**சி. கதிர்காமநாதன்**

கடை வாசலை அண்மித்தபோது 'கிளாக்கர்' என் பெயர் சொல்லி அழைப்பது கேட்டது. தேவதாஸ் வாசலைக் கூட்டிக்கொண்டிருந்தார். நான் மறுபடி றோட்டைக் கடந்து அவரிடம் சென்றேன். காலை எட்டு மணிதானே! சனம் வரத் தொடங்கவில்லை. மினிபஸ்கள் வேகமாக ஓடிக் கொண்டிருந்தன. கிளாக்கர் சோடாப் போத்தல்களைக் குளிர் சாதனப் பெட்டிக்குள் அடுக்கிக்கொண்டு என்னைப் பார்த்தார். வயது அறுபதிற்கு மேல் ஆகிவிட்டதன் விளைவு, முதுகில் கூன் அதிகமாக விழுந்துவிட்டதுபோல் தெரிந்தது. நடக்கும்போது வலக்காலைச் சாய்த்துச் சாய்த்துத் தான், நடப்பார்.

"என்ன கிளாக்கர் ஐயா கூப்பிட்டியள்?"

"ஒன்றுமில்லை சும்மாதான் கூப்பிட்டனான். வேலைக்கு வாறதென்டால் சரியான கஷ்ரமாக் கிடக்கு. வீட்டில வெளிக்கிட்டு இங்க வாற வரைக்கும் ஆயிரத்தெட்டு செக்கிங். அவங்கள் கதைக்கிறதும் விளங்கேல. அடையாள அட்டை நம்பரை, கேட்ட உடனே சொல்லச் சொல்லுறாங்கள். நாங்கள் என்ன அந்தப் பெரிய நம்பரைப் பாடமாக்கியே வைச்சிருக்கிறம். அண்டைக்கு வரேக்க இடையில ஏதோ குண்டுச்சத்தம் கேக்க, எங்கள மறிச்சு நடுரோட்டில இருத்தி வைச்சுப் போட்டாங்கள். நல்ல வெய்யில். எனக்குத் தலை சுத்தத் தொடங்கிட்டுது. சிலபேருக்கு நல்ல அடி. ஆனா எங்கட ஆக்களுக்கு அவங்கட கதையில ஒண்டு பாடமாகிவிட்டது. அது என்னடா தம்பி 'சலோ! சலோ!'? "ஹிந்தி தானே அது?"என்றவாறு என் முகத்தைப் பார்த்தார்.

"ஹிந்தி தான். அவங்களில எல்லா மொழிக்காரரும் இருக்கினம். எனக்கு ஒரே கரைச்சலாக் கிடக்குது. அடிக்கடி பிடிச்சுக்கொண்டு போய்க் காம்பில வைச்சு விசாரிக்கிறாங்கள். அடியும் போட்டு விடுகிறாங்கள். எங்களுக்குத் தெரிந்தால், பெடியளைப்' பற்றிச் சொல்லிப் போடவேணுமாம். இரவிலயும் நித்திரையில்லை. நாய் குலைக்கத் தொடங்கினால், ரோந்துபோக இவதான் வருகினம் எண்டு தெரியும். 2 மணியோ, 3 மணியோ எந்த நேரத்திலேயும் வாறாங்கள். போகேக்க படலைகளை உதைச்சுப் போட்டுப் போறாங்கள். அண்டைக்கு மாமாவின் மகனைப் பிடித்துக் கொண்டு போட்டாங்கள். அவன் கையில கத்தி வெட்டி, மருந்து கட்டியிருந்தவன். உவங்கள், இவன் சண்டைக்குப் போய்த்தான் காயம் வந்ததெண்டு சொல்ல, பிறகு இரண்டுநாள் கழிச்சு அடிகாயத்தோட கொண்டு வந்து போட்டிட்டுப் போட்டாங்கள்"

கிளாக்கர் நீண்ட பெருமூச்சு விட்டார்.

"என்ன தம்பி செய்யிறது? எல்லாம் எங்கட தலை எழுத்து".

"கிளாக்கர்! எங்கட வீட்டுக்குப் பக்கத்தில பெரிய காம்ப். எப்ப பார்த்தாலும் வீட்டச்சுத்தி அவங்கள் தான். பெரியாக்கள் நிண்டாப் பிரச்சனை இல்லை. அவை இல்லாத நேரம் கரைச்சல்தான்..." சட்டென்று பேச்சை நிறுத்தினேன். பச்சை நிறத்திலே கனரக வாகனங்கள் றோட்டில் விரைந்து சென்றன.

"சரி கிளாக்கர், பாங்கில வேலை இருக்கு. நான் வாறன்." "உனக்கென்ன இன்னும் கொஞ்ச நாளைக்குத்தானே இங்க வேலை." நான் குழப்பத்துடன் அவரைப் பார்த்தேன்.

"என்னதம்பி உனக்கு விஷயம் தெரியாதோ? உன்ர முதலாளியின்ர மகன் உன்ன இந்தியாவுக்குக் கூட்டிக்கொண்டு போறார். அண்டைக்கு என்னோட கதைச்சவர். பிறகு இதைப்பற்றிக் கதைக்கலாம். நீ இப்ப அவரோட போட்டு வா."

"கிளாக்கரையா சாப்பாடு முடிஞ்சுதோ? காலையில நீங்கள் சொன்னபிறகு, முதலாளியின்ர மகன் என்னோட கதைச்சவர். அங்க அவயின்ர பஸ் கொம்பனியப் பார்க்க ஆக்களில்லையாம். கொஞ்சக்காலம் என்னை வந்து நிக்கட்டாம். எனக்கென்னவோ இதில விருப்பம் இல்லை."

"என்னடா தம்பி அமைதிகாக்க வந்து, சண்டையில தொடங்கி இப்பிடி அழிவு வருமெண்டு நாங்களெல்லாம் நினைச்சிருப்போமோ? இந்தச் சண்டைக்குப் பிறகுதானே எத்தினைபேர் வெளியால ஓட வெளிக்கிட்டு இருக்கினம். இன்னும் இவங்கள் இருப்பாங்களோ? போவாங்களோ? அல்லது இதுமாதிரிச் சண்டைவருமோ? கடவுளே! அது சரி, நீயேன் இப்பிடிக் கிடந்து கஷ்டப்பட வேணும்? கொஞ்சக் காலத்துக்குப் போய் உழைச்சுக்கொண்டுவாவன். உன்ர குடும்பமும் பெரிய குடும்பம்தானே. கனக்க யோசிக்காதே."

"கஷ்டம், துன்பம் வந்தாலும் சொந்த இடம், சொந்த மண். அழுதாலும், சிரித்தாலும் நாங்கள்தான். வீட்டில சொன்னால் சந்தோசப்படுவார்கள். 'உனக்காவது இந்தியா போகச் சந்தர்ப்பம் கிடைச்சுதே' எண்டு, சற்று நேரம் இருவரும் ஒன்றும் பேசவில்லை.

"என்ன யோசினை வேண்டிக் கிடக்கு? உதில பக்கத்தில இருக்கிற நாட்டுக்குப் போறதுக்கு".

"எனக்கு என்ன முடிவு எடுக்கிறது எண்டுதான் யோசினையாக்கிடக்கு. என்னதான் பக்கத்து நாடென்றாலும் முன்பின் பழக்கமில்லாத இடந்தானே."

"முன்பின் பழக்கமில்லாத இடமென்றாலும் நீ வேலை செய்யப்போறது, தமிழ்நாடுதானே. பிறகென்ன பயம்?"

கிளாக்கர் என்னை எப்படியும் அனுப்பி விடுகிறதென்ற முடிவில் உற்சாகமாகப் பேசிக்கொண்டு போனார். அவர் சொல்வதிலும் உண்மை இல்லாமலில்லை.

"எங்கள் மொழி கதைக்கிற சனம்தானே. பிரச்சனை இல்லை. அங்கைபோய் வந்தவர்கள் எல்லாம் கனக்கக் கதைத்துள்ளனர். எங்களுக்குத் தாய்வீடு அதுதானே. பிறகென்ன பயம்?"

கதையில் மூழ்கிவிட்டதால், சோடா வாங்க வந்தவர்களை மறந்துவிட்டோம்.

"சரிசரி, கிளாக்கரையா, சனம் வந்திட்டுது. இண்டைக்கு ஆறுமணிக்குத்தானே ஊரடங்குச் சட்டம் எண்டு கதைக்கினம். எங்களுக்கென்ன அஞ்சு மணிக்கே வெளிக்கிட வேண்டியதுதான். அவங்கள் தேடுதல் நடவடிக்கை எண்டு, ஒவ்வொரு பகுதியாயெல்லே ஊரடங்குச் சட்டம் போடுறாங் கள்."

"நீ வழக்கம்போல என்னோட வந்திடு. ஏதோ கொஞ்சத் தூரம் தன்னும் உன்னோட பாதுகாப்பா வந்திட்டு, நானும் என்ர வழியில போயிடுறன்." கிளாக்கர் வியாபாரத்தில் இறங்கி விட்டார்.

பின்னேரம் வீடு திரும்பும்போது கிளாக்கர், இதனைத்தான் கதைத்தார். என் வீட்டிலுள்ளவர்கள் என் வித்தியாசமான கோலத்தைக் கண்டுபிடித்துவிட்டார்கள். "என்ன தம்பி? வேலைக்குப் போய் வாறதில பிரச்சனையாக் கிடக்கே. எங்களுக்கும் நீ வரும்வரை நெஞ்சிடிதான். நீ போன கையோட துவக்குச் சத்தம் கேட்டது. அவ்வளவுதான்... ஏன் வெள்ளைக் கொடி எடுத்துக்கொண்டு போகேல்லயே?" என்றாள் அம்மா.

"வெள்ளைக் கொடியும் அடையாள அட்டையும் இல்லாமல், யார் வெளியால வெளிக்கிடுகினம்? வழியில வாற பிரச்சனை எல்லோருக்கும் வாற பிரச்சினைதானே."

"அதுசரி ஏன் இப்பிடி ஒருமாதிரி இருக்கிறாய்?" அம்மா இனி விடமாட்டாள். இனி மறைக்க முடியாது. வீடு இருளில மூழ்கிக் கிடந்தது. மூலைக்கு மூலை ஒவ்வொரு வரும் யோசனையில் இருந்தார்கள். சண்டைக்குப் பின் மின்சாரம் இல்லாமல் போய்விட்டது. இனி எப்போது வருமோ?

அம்மா மீண்டும் என்னைக் கேள்வியால் துளைத்தாள்.



"அம்மா அவசரப்படாதேங்கோ. இதுதான் விசயம். என்ர முதலாளியின்ர மகன் தன்னோட இந்தியாவுக்கு வரட்டாம். இந்தியா என நான் சொன்னதைக் கேட்டு, மூலையில் யோசனையில் இருந்தவர்கள் எல்லோரும் - உடன் எழுந்துவந்து என்னைச் சுற்றி இருந்துவிட்டார்கள்.

"என்னடா இது! இந்தியா எண்டதும் ஓடிவந்திட்டியள்."

"இந்தியா எண்டால் எங்க வேலை."

அண்ணா ஒருமாதிரி இழுத்தார்.

"தமிழ் நாட்டிலதான்."

"தமிழ் நாட்டிலே வேலை? நல்லதாப் போச்சுது".

அக்காவின் குரலிலே சந்தோசம் இழையோடியது.

அந்த விளக்கு வெளிச்சத்தில் அவர்களின் முகங்களில் தெரிந்த மலர்ச்சியை என்னால் உணரமுடிந்தது. இந்தச் சந்தோச உணர்வு ஏன் வருகிறது?

எங்களுக்குத் துணைக்கு நல்ல பக்கத்து வீடு இருப்பது போல், நம்பிக்கை ஏற்பட்டுவிடுகிறது. முருகனின் படத்திற்குக் கீழே எழுதியிருக்கும் 'யாமிருக்கப் பயமேன்' என்ற வாசகம் நினைவிற்கு வருகின்றது.

எங்கள் மொழி, பேசும், இனம் அங்கு இருப்பதனால்தான், இந்த உணர்வு ஏற்படுகிறது.. இந்த உணர்வு பெருகிப் பெருக்கெடுத்து, உணர்ச்சி மேலிடநின்ற அந்த நாளை வாழ்க்கையில் யாரும் மறக்கமாட்டார்கள். அப்போது பின்னேரம் நாலு மணிக்கு மேல் இருக்கும். நான் வேலைக்குப் போய்வந்து, தேநீர் குடிக்கும்போது, அந்த இரைச்சல் கேட்டது.

அது என்ன சத்தம்?

வாழ்க்கையில் நாங்கள் கேட்டு அனுபவித்திராத சத்தம். எங்கள் எதிரிகளே நிலைகலங்கி நின்ற சத்தம். துன்பப்படுபவர்களைச் சந்தோசத்தில் பூரிக்க வைக்கின்ற சத்தம்.

எங்கும் ஒரே ஆரவாரமாய் இருந்தது.

'தம்பி ஓடிவா. பெரிய பிளேனடா. இரண்டு பக்கத்தாலை சுத்துது. இப்படிப் பிளேனை நாங்கள் கண்டதில்லை. பாகிஸ்தானிலை இருந்து வந்து, குண்டு போடப் போறாங்களோ?' அக்கா நடுங்கிக்கொண்டு சொல்லிக்கொண்டு போக, மற்றவர்களும் அச்சத்துடன் நின்றனர்.

வீதியிலே சனங்கள் ஓடிவந்தார்கள். சந்திக்குப் பக்கத்தில் அமைந்திருந்த, கல்லூரி விடுதியிலே - தங்கிப் படிக்கும் பெண்கள், அலறிக்கொண்டு ஓடி வருவது தெரிந்தது. ஓட்டம், இரைச்சல், ஆரவாரம், திகைப்பு, படபடப்பு

இத்தனைக்கும் யாருக்கும் என்ன காரணம் என்று தெரியவில்லை.

எல்லோரும் வானத்தை அண்ணாந்து பார்த்தார்கள். மறுபடியும் அந்த இரண்டு விமானங்களும் கரணம் அடித்துச் சாகசம் புரிந்து, சுற்றிவந்தன. அந்தநேரத்தில் பூவால் மாலை கோர்த்ததுபோல ஒன்றன் பின் ஒன்றாக, வரிசையாக அந்த இராட்சத விமானங்கள் வெளிப்படத் தொடங்கின.

எல்லோரும் வானத்தைப் பார்த்தபடி நின்றோம். முதலில் வெளிப்பட்ட விமானம் சென்று, அதிலிருந்து பரசூட்டிலே பெட்டியாகக் கட்டியபடி ஏதோ கீழே விழுந்தது. அதைப் போல மற்ற விமானங்களும் பொதிகளைத் தள்ளியபடி சென்றன.

"உது ஏழாலைப் பக்க மெல்லே போய் விழும்?"

"ஆமிக்காரங்களைத்தான் இறக்கிறாங்கள்போல கிடக்கு."

'ஆமிக்காரங்களை இறக்குறாங்கள்' என்று யாரோ சொல்ல, றோட்டிலே குழுமி நின்றவர்கள், அலறிக்கொண்டு ஓடமுற்பட்டார்கள். அக்கா அழுதபடி உள்ளே ஓடினாள்.

என்ன நடந்தது?

உண்மையாகவே தோட்ட வெளிகளில் ஆமியை இறக்கி விட்டார்கள் தானா? ஒன்றும் புரியவில்லை.

அந்த நேரத்திலே றோட்டிலே 'பெடியன்களை' ஏற்றியபடி வாகனங்கள் சென்றன.

"ஐயோ! கடவுளே! சண்டைதான் தொடங்கப் போகிறது. எல்லோர் எண்ணமும் அதுதான்.

இந்தவேளையிற்தான் அந்தச் செய்தி காதில் விழுந்தது.

"இந்தியாவில இருந்து பிளேனிலை சாப்பாட்டுச் சாமான்கள் போட்டுட்டுப் போயினமாம்".

நாங்கள் எதிர்பாராதது நடந்து விட்டது. யாரும் இப்படி நடக்குமென்று நினைக்கவில்லை. உணவுச் சாமான்கள் போட்ட கையோடு, அடுத்தடுத்துச் சடுதியாக மாற்றங்கள். ஒப்பந்தம் என்ற பெயரிலே துருப்புக்கள் இறக்கப்பட்டன. ஒருநாள் முழுக்க எத்தனை விமானங்கள் ஏறி இறங்கின. அவற்றின் சத்தமும், இரைச்சலும் எமக்குப் புது அனுபவத்தைக் கொடுத்தன. வரிசை வரிசையாக அவர்கள் கனரக வாகனங்களில் நகரத்தொடங்கிய போது, மனம் குதூகலித்தது. வீதிகளில் போவார், வருவோர் எல்லோரும் கைகளை அசைத்து, நல்வரவு கூறினர்.

'இவ்வளவு வாகனங்களோட இவ்வளவு பேர் வந்திருக்கிறார்களே! எத்தனை விதமான வாகனங்கள்!'

அவர்கள் - வீதியால் வரும்போதெல்லாம் இந்தக் கதைதான்.

'பெரிய அடுக்குகளோட வந்திருக்கினம். உடனை போய்விடுவினம்போல.'

எல்லோர் மனதிலும் இந்த எண்ணம் எழத்தான் செய்தது.


'அமைதிப்பணி முடிந்ததும் உடன் போய்விடுவார்கள்' என்ற செய்தியும் வந்துகொண்டுதான் இருந்தது.

சந்தியில் வாகனங்களை விட்டு, அவர்கள் இறங்கி நின்றபோது, அவர்களைச் சுற்றி ஒரேகூட்டம் கூடிநிற்கும். அதிலும், ஓரிரண்டு தமிழ்பேசும் உயிர்கள் அந்தப் பச்சை உடைக்குள் இருந்தாற்கேட்க வேண்டாம். சின்னப்பிள்ளைகளைப்போல, தோளில் ஏறாத குறைதான். பலநாள் வீட்டிற்கு வராத உடன்பிறந்தவர்கள் - திடீரெனச் சொல்லாமற்கொள்ளாமல் வந்தால் என்ன சந்தோசம் ஏற்படுமோ, அந்தநிலைதான். அவர்களின் பேச்சு, சிரிப்பு, கும்மாளம் அதைத்தான் காட்டின.

என்ன? உண்மையாகவே பிரச்சனைக்குத் தீர்வு வந்துவிட்டதா? இனிமேல் 'ஷெல்லுக்கும், துப்பாக்கி வேட்டுக்கும், வானிலிருந்து வீசப்படும் குண்டுகளுக்கும், 'ஆமிக்காரங்கள் வந்திட்டாங்கள்' என்ற கூக்குரலுக்கும் அஞ்சத் தேவையில்லையா? இரத்தம் பீறிடும் உடல்களைச் சுமந்தபடி, அலறிக்கொண்டு விரையும் அம்புலன்ஸ் வண்டிகளுக்கு ஓய்வு கிடைத்துவிடுமோ? வேலைக்கு, ஆஸ்பத்திரிக்கு, பள்ளிக்கூடத்துக்கு என்று புறப்பட்டு, இடையிலே குண்டுகளினாற் துண்டு துண்டாக, சதைக்கூழமாக மாறும் எமது அவலவாழ்விற்கு முடிவு வந்துவிட்டதா?

(தொடரும்..)

# முகமூடிகள்



உங்களிடம் இருப்பதுவோ ஒரு கோடி முகமூடி!
நேரத்துக் கொன்றாய் அணிந்து
நிசமுகத்தைக்
காட்டாமல் 'ஆஹா' கலக்குகிறீர்!
அசிங்கங்கள்
கூட்டமாய் குவிந்தும் கொடுவேட்டைப் பற்களெல்லாம்
நீட்டிக் கிடந்தும், அழுகி, நிணம் வடிந்தும்,
புழுக்கள் நெளிந்துங்
கிடக்கும் உம்' 'புதுமை' முகம்
அழகான முகமூடியாலே சிரிக்கிறதே!
பொய் முகத்தினோடு புளுகுகிறீர் சந்திகளில்
பொய் முகத்தினோடு புன்னகைப்பீர்....
நட்புகளின்
பைகளிலே கைவைத்துப் பசிதணிக்கும் வேளைகளில்;
சிவனின் கழுத்தமர்ந்த செய்கையினால்
கருடனஞ்ச
உயிர் வளர்ப்பீர்! வெல்வீர்!
உபதேசம் ஊருக்குச்
சொல்லத்துணிந்து குரல் செருமி முன் வருவீர்.
அமைதி குடியிருக்கும் அகம்-
முகத்திற் தெரியுதென்று
உலகம் புகழும்; ஊர் தலையில் வைத்தாடும்!
உங்கள் முகமூடி
ஓர் பொறியிற் பொசுங்குகையில்
செங்கனலில் முகமூடி ஒவ்வொன்றாய்த் தீய்ந்திடையில்
உங்கள் நிசமுகமோ
உலகுக்குத் தெரியவரும்.
எங்கள் நிசமுகத்தை அன்றெட்டுத் திசையறியும்.

த.ஜெயசீலன்

# கேட்காத கேள்விகள்



ஒரு காற்றென
வழி மறித்துச் சொன்னாய்...
என்
காலங்களுக்குத்
துணையிருக்கப்போவதாய்.....
என் காயங்களுக்குக்
கட்டிடப் போவதாய்...
என் கவிதைகளுக்குக்
கருவாகப் போவதாய் ...

எந்தக் காலங்கள் ....?
எந்தக் காயங்கள் ....?
எந்தக் கவிதைகள்....?

எதுவுமே கேட்காமல்
சம்மதமாய் தலையசைத்தேன்...


இப்போது உள்ளே
கனக்கின்றன கேள்விகள்...

எந்தக் காயங்களுக்குத் துணையிருப்பாயென...?
எந்தக் காயங்களுக்குக் கட்டிடுவாயென ...?
எந்தக் கவிதைகளுக்குக் கருவாகுவாயென...?

ஒரு காற்றென
மீண்டும் நீ வழிமறிக்கையில்
கேட்க வேண்டும் உன்னிடம்....?

- தாட்சாயணி

# நூல் அகம்





வளவை வளவனால் எழுதப்பட்ட "தேசத்தின் பாடல்கள்" என்ற 21 சிறு கதைகள் அடங்கிய சிறுகதைத் தொகுதி ஒன்று வெளிவந்துள்ளது.

தேசத்தின் பாடல்கள் என்ற பெயர் வரக் காரணம் பற்றி ஆசிரியர் குறிப்பிடும்போது, புயலின் சுவடு மாறாத, ஒரு தேசத்தின் பாடல்கள் இவை என்று குறிப்பிடுகின்றார். அவரது 21 கதைகளிலும் தேசிய உணர்வுகளைப் பாடல்களின் மூலம் பரப்பிய பாரதிதாசன், பாரதியார் முதலான கவிஞர்களின் பாடல் வரிகள் இடம்பெறுகின்றன.

தேசத்தின் பாடல்கள் என்ற பெயரை, இச்சிறுகதைத் தொகுதி பெற்றமை பொருத்தமுடையதாகவே தெரிகின்றது.

தேசத்தின் பாடல்கள் கதைத்தொகுதி - பல்வேறு கருப் பொருள்களைக் கொண்டிருக்கின்றன. இனம், மதம், சாதி, சிறுவர் பிரச்சினை, பெண்களின் பிரச்சினை, காதல், பசி முதலான கதைச் சுருக்கங்களை ஆசிரியர் கையாண்டுள்ளார்.

கதைக்கருக்கள் பல்வேறு வகையில் அமைக்கும் போதும், எழுத்தாளர் வலியுறுத்தும் பிரதான கருத்து - தேசவிடுதலை பற்றியதாகவே அமைகின்றது. தேசம் விடுதலை பெற்றால், அனைத்து விடுதலையும் அதனை ஒட்டியதாகக் கிடைத்துவிடும், என்பதைத் தனது கதைகளிலே நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

"போராளிகள்" என்ற கதையில் சாதிப் பிரச்சினை குறிப்பிடப்படுகின்றது. பல்வேறு சீர்திருத்தக் கருத்துக்களையும் தனது கதையிலே, அவர் குறிப்பிடுகின்றார். 'ஒரு விதவை மலர் சூடுகின்றாள்', விதவை மணம் பற்றி உரைக்கிறது. குழந்தைகள் விழா கொண்டாடி விட்டு, குழந்தைகளை அடித்து விரட்டும் மேடைப் பேச்சாளர்களுக்கு 'அவள் ஏன் ஓடுகின்றாள்' என்ற கதையில் சாட்டையடி கொடுக்கின்றார் வளவைவளவன்.

இராணுவ நடவடிக்கைகளால் இடப்பெயர்வுப் பிரச்சினை எவ்வளவுதூரம் வாட்டியது என்பதற்கு, இத்தொகுதியில் இடம்பெறும் 'மானுடம் சாகவில்லை', "தேசத்தின் பாடல்கள்", "அரங்கேற்றம்" முதலானவை சான்றுபகர்கின்றன.

போராட்டகாலங்களில் மக்கள் பட்ட இன்னல்களை 'கலாசாரம்' என்ற கதையின் ஊடாகக் குறிப்பிடுகின்றார் இவர். ஏ-9 பாதை அடைக்கப்பட்டு, பொருளாதாரத்தடை விதிக் கப்பட்டிருந்த காலப்பகுதியில் ஒரு கலாசாரத்திற்கு மக்கள் பட்ட அவலமும், பணங்களியில் உடுப்புத் தோய்த்த சம்பவத்தையும் அழகாக இச்சிறுகதைத் தொகுதியில் விபரிக்கப்படுகின்றது.

போராட்ட வாழ்வில் பாதிக்கப்பட்ட மக்களைக் கவனிக்காது, தம்முடைய சொந்த நலன்களைப் பேணிக்கொண்டு, போராட்டத்திலிருந்து ஒதுங்கிய மனிதர்களை, 'இந்த மண்ணில்தான் இதுகளும்' என்ற கதையூடாக வெளிப்படுத்தும் வளவை வளவன்-

காலங்கடந்த திருமணம் - குழந்தைப் பேற்றில் ஆபத்துக்களை உண்டுபண்ணிவிடும் என்கின்ற விஞ்ஞானபூர்வமான, சமூகத்திற்குப் பயனுள்ள கருத்தையும் "நிழல் தேடும் நெஞ்சங்கள்" கதையில் குறிப்பிடத்தவறவில்லை.

இவர் இன்னொருவரிடம் கையேந்தி நிற்கும் நிலையைத் தவிர்க்கிறார். 'எங்களுடைய வறுமையைப் போக்கி, நாங்கள்தான் கஷ்டப்பட்டு உழைக்கவேண்டும். சொந்தக்காரர்களிடம் கைநீட்டியோ, சும்மா இருந்து கடவுளிடம் மன்றாடி வறுமையைப் போக்கிவிடமுடியாது என்பதை-

'வேதனைப் புயல்கள்' என்ற தனது முதல் சிறுகதையிலேயே, குறிப்பிட்டு ஒரு சீர்திருத்தவாதியாகக் கதாசிரியர் விளங்குகின்றார்.

பாத்திரங்களை அறிமுகம் செய்யும்விதத்திலும், கதை சொல்லும் விதத்திலும் கைதேர்ந்தவராக இவர் மிளிர்கிறார்.

பாரதியார், பாரதிதாசன் பாடல்கள், பழமொழிகள், ஒளவையார் பாடல்கள் முதலியன இக்கதைத் தொகுப்பில் இடம்பெறுவது, இவரின் ஆழ்ந்த தமிழ்ப் புலமையை வெளிக்கொணர்கின்றன.


# மின்கம்பியும் தந்திக்கம்பியும்

வீதியோரங்களில்
நீண்டு - நீண்டு
மிக நீண்டிருக்கும்
மின்கம்பிகளின்
தந்திக்கம்பிகளின்
பயன்பாடு
மின்சக்தியையும்
செய்திகளையும் மட்டும்
மக்களுக்குச் சீராக
வழங்குவதற்காகத்தானோ?
இல்லை... இல்லை!!
இவைகளின் சேவைகள்
இவைகளின் தேவைகள்
பற்பல உள்ளன!
அவைகளிற் சிலவே
கவிதையில் வருமே!!

வீதியோரங்களில்
வளமுடன் வளரும்
காட்டுக் கொடிசெடிகள்
தங்கள்மேலே
பற்றிப்படர்ந்து
காற்றில் அசைந்தாட
உதவிடும் இக்கம்பிகள்!
இடம்தரும் இக்கம்பிகள்!!

வானவெளியில்
காற்றில் துணையுடன்
உயர - மிக உயரப்
பறக்கும் பட்டங்களைத்
தம்மில் சிக்கவைத்துக்
கிழித்தும் சீரழித்தும்
சிறுவர்களின் உள்ளம்
ஏங்கித் தவித்திடச்
செய்வதில் வல்லவை
இக்கம்பிகள்தானே!

காக்கைக்குலத்தின்
படுக்கை அறை -
கூடுகள் கட்டி
முட்டைகள் இட்டுக்
குஞ்சு பொரித்து
இனம் பெருக்கும்
பிரசவ அறை -
வீதியோரங்களில்
தேங்கிநிற்கும்
அழுக்கு நீரில்
இனசனத்துடன்
மகிழ்ச்சிக்குரலெழுப்பி
நீராடிப்பின்
நனைந்த இறக்கைகளை
விரித்து அடித்தும்
அடித்து விரித்தும்
ஈரக்கை உலர்த்தும்
குளியலறை -
என்றெல்லாமே
இவையல்லாது



வேறெவையாம்?

இவையில்லையேல்
சிலந்திவலை பின்னி
வாழ்க்கை நடத்தவும்
தூக்கணாங்குருவிகள்
கூடுகட்டி மகிழவும்
வசதிகள் மிகுந்த
இடமேது?

அணிற்பிள்ளைகள்
கம்பிமேல் நடந்தும்
ஓடி விளையாடியும்
"சர்க்கஸ்" வித்தைகள்
நிகழ்த்திக் காட்டும்
அரங்கு தான் இவை!
அணிலும் எலியும்
வீதியின்
இக்கரையிலிருந்து
அக்கரைக்கு
கடந்து செல்ல உதவும்
மேம்பாலமும் இவையே!

சமூக விழாக்களினை
அலங்கரிக்கும்
கடதாசி மாலைகளை
காட்சிகளின்
பல வர்ணக் கொடிகளை
தம்பிமார் கட்டிட
நம்பிக்கை தருகின்றவை
இவையன்றி வேறெவை?

இராக்காலங்களில்
வானவெளியில்
சுற்றிப் பறந்து
சுதந்திரத்தில் மகிழ்ந்து
களைத்த பொழுதில்
ஊஞ்சலாடி மகிழ்ந்திட
உதவிடும் மின்கம்பிகளே-
வௌவால்களுக்கு
சிலவேளைகளில்

தூக்கு மேடையாகவும்
அமைந்து விடுவது
துரதிர்ஷ்ட வசமானதே!!

வீதியோரத்தில்
இறந்து கிடக்கும்
தம்மினத்தவர்களுக்காகத்
தம்மினத்தவர்களை
கூவி அழைத்து
கூடி இருந்து
கத்திக் குழறி
கூக்குரல் எழுப்பித்
துயர் பகிர்வதற்காகத்தானே
இந்தக் கம்பிகள் -
வீதியோரங்களில் !!

இப்படி இப்படி
இவைகளின் சேவைகள்
எப்படி எப்படி
அனைத்தையும்
விரிப்பது!!

முருகு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**
எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.
- திருக்குறள்.

# நமது நோக்கு

## பொருந்தாத நியாயம்!

காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறைத் துறைமுகங்களின் அபிவிருத்திக்கு வெளிநாட்டு உதவி கோரப்பட்டிருப்பதாகவும், இதற்கான நிதி கிடைத்தால் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளமுடியும் என்றும் துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டிலுள்ள இந்த இரண்டு முக்கிய துறைமுகங்களும் அபிவிருத்தி செய்யப்படவேண்டும் என்ற கருத்து நீண்டகாலமாகவே இருந்து வந்திருக்கின்றது.

ஆனால், இந்தத் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மட்டும், இதுவரை எவராலும் முன்னெடுக்கப்படவில்லை. அரசாங்கம் இந்த விடயத்தில் பாராமுகமாகவே இதுவரை காலமும் இருந்து வந்துள்ளது.

வட- கிழக்கில் யுத்தம் தீவிரம் பெற்ற பின்னர், காங்கேசன்துறைத் துறைமுகம், அரச படைகளின் முக்கியமான விநியோகப் போக்குவரத்து மார்க்கமாக இருந்து வருகின்றது.

இதனால், இந்தத் துறைமுகத்தை அபிவிருத்தி செயவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாததுடன்- இத் துறைமுகத்தின் பயன்பாட்டை யாழ்ப்பாண மக்கள் முழுமையாக அனுபவிக்க முடியாதநிலையும் காணப்பட்டது. இன்று வரை இந்த நிலைதான் தொடர்கின்றது.

காங்கேசன்துறை துறைமுகத்தைப் பொறுத்தவரையில் - யாழ்.குடாநாட்டுக்கான முக்கிய போக்குவரத்து-பண்டப்பரிமாற்றுத் துறைமுகமாக இருந்து வருகின்றது. சீமெந்து தொழிற்சாலை இயங்கியபோது இத்துறைமுகத்தின் பயன்பாடு உச்சமாக இருந்தது.

ஆனால் - இப்போது இத்துறைமுகத்தை முழுமையாகப் பயன்படுத்தவோ, அபிவிருத்தி செய்யவோ, பெரும் தடையாக இருப்பது - அது உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்திருக்கின்ற காரணத்தினாலேதான்.

காங்கேசன்துறைமுகத்தைப் பொறுத்தவரையில், இது முழுவதும் இராணுவ மயமாக்கப்பட்டு இருப்பது, அபிவிருத்திக்குப் பெருந்தடையாக இருந்து வருகிறது.

இதேநிலையில்தான் - பருத்தித்துறை துறைமுகமும் இருந்து வருகிறது. நிவாரணப் பொருட்களை இறக்குகின்ற துறைமுகமாக - பருத்தித்துறை துறைமுகம் செயற்படுகின்றதே தவிர - ஒரு துறைமுகத்திற்குரிய அடிப்படை வசதிகளையோ கட்டமைப்புக்களையோ இது கொண்டிருக்கவில்லை.

துறைமுகத்தின் இறங்குதுறை வசதி குறைந்ததாக இருப்பதால், இதில் பணியாற்றும் தொழிலாளர்கள் ஆபத்தான சூழ்நிலையிலேயே பணிபுரிய வேண்டிய நிலையிலுள்ளனர். இத்தகைய நிலையால், பல துறைமுகத் தொழிலாளர்கள் விபத்துக்களைச் சந்தித்துள்ளனர்.

அண்மையில், இத்துறைமுகத்தை - துறைமுக அபிவிருத்தி அதிகாரசபை தம்வசம் எடுத்துக்கொண்டிருப்பதுடன், ஒரு தொகுதி ஊழியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கியுள்ளது.

ஒரு நாட்டைப் பொறுத்தவரையில் துறைமுகங்கள் மிக அத்தியாவசியமானவை. இதை உணர்ந்துதான், குடாநாட்டிலுள்ள இரண்டு முக்கிய துறைமுகங்களையும், அரச படைகள் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன.

இவ்வாறு இராணுவ மயமாக்கப்பட்ட சூழலில் இருக்கும் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு, வெளிநாட்டு உதவிகள் கிடைக்குமா என்பது சந்தேகமே. அமைச்சர் ரவூப் ஹக்கீம் - இது தொடர்பாக வெளிநாட்டு உதவியை எதிர்பார்த்திருப்பதாகக் கூறியுள்ள போதும் -

இந்த உதவிக்கோரிக்கைகளுக்கு எத்தகைய ஆதரவு கிடைக்கும் எனக் சொல்லமுடியாதுள்ளது. இராணுவ வல்யத்தினுள் சூழப்பட்டிருக்கும் துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய, வெளிநாடுகள் உதவியளிக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஆனால், வெளிநாட்டு உதவி கிடைத்தால்தான், இநதத் துறைமுகங்களைப் புனரமைக்க முடியும் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளது ஏற்புடையதல்ல. நாட்டின் ஏனைய துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய அரசு செலவிட்ட தொகையில், ஒரு சதவீதத்தைக்கூட இத்துறைமுகங்களின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தபட்டதா என்றால, இல்லையென்றே கூறவேண்டும்.

இப்படியான நிலையில் குடாநாட்டு துறைமுக அபிவிருத்திக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைக்க வேண்டுமென எதிர்பார்ப்பது, எந்த வகையில் பொருந்தும்? இது அரசு தனது பொறுப்பை தட்டிக்கழிக்கும் நிலை போல் தோன்றவில்லையா?

# தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டமானது வாழ்வுக்காகவும் வசதிக்காவும் ஏற்படுத்தப்பட்டதல்ல!

### குட்டிமணி, தங்கத்துரை நினைவுக் கூட்டத்தில் சிவாஜிலிங்கம் உரை



எம்.கே.சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

சிங்கள இனவாதிகளால் தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள், தமிழர் தாயகத்தை விழுங்க முயற்சித்ததன் விளைவுதான் - தமிழ் இளைஞர்களுடைய இன்றைய ஆயுதப் போராட்டம் என, தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுபபினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை, நல்லூரில் நடைபெற்ற - வெலிக்கடைச் சிறையில் கொல்லப்பட்ட குட்டிமணி, தங்கத்துரை ஆகியோரின் 20 ஆம் ஆண்டு நினைவுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

சிங்கள மொழிச்சட்டம் கொண்டுவரப்பட்டபோது, தமிழ்த் தலைவர்கள் - அகிம்சைப் போராட்டத்தைக் காலிமுகத்திடலில் நடத்தினர்.

அந்த வேளையில், சிங்கள காடையர்களைக்கொண்டு தமிழ்த் தலைவர்கள் தாக்கப்பட்டனர். இதன் பின்னர், தமிழ் மக்கள் மீது இனஒடுக்குமுறை தொடர்ந்துகொண்டிருந்தது. அப்போது 1961 ஆம் ஆண்டு, தமிழரசுக் கட்சியினர் அகிம்சைப் போராட்டம் நடத்தினர். அவர்களது போராட்டமும் நசுக்கப்பட்டது. தமிழ்த் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இவ்வாறான ஒரு நிலையில்தான், தமிழ் இளைஞர்கள் ஆயுதப் பேராட்டத்தை ஆரம்பித்தனர். இளைஞர்களுடைய போராட்டம் என்பது - அவர்களது வாழ்வுக்காவும், வசதிக்காகவும் ஏற்படுத்தப்பட்ட ஒன்றல்ல.

1970 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தரப்படுத்தலும், புதிய அரசியல் யாப்பின் உருவாக்கமும், தமிழர்களை விழிப்படையச் செய்தது. விழிப்படைந்த மக்கள், ஐக்கிய இலங்கைக்குள் ஒரு சமஷ்டி ஆட்சியை, எமக்குத் தரும்படி தேட்டுக்கொண்டனர்.

இவ்வாறான நிலையில்தான் - தந்தை செல்வா, இழந்துபோன உரிமைகளை மீளப் பெற்றுக்கொள்ள, பிரிந்துபோவதைத்தவிர, வேறுவழியில்லை எனத் தெரிவித்தார்.

ஆயுதப் போராட்டம் இவ்வாறான சூழ்நிலையில்தான் உருவாகியது. ஆயுதப் புரட்சியின் மூலம்தான் தமிழர்களின் விடுதலையை வென்றெடுக்கமுடியும் என, தமிழ் இளைஞர்கள் தீர்மானித்தனர். இன்று, சர்வதேச ரீதியாக இந்த ஆயுதப் போராட்டம் வளர்ந்துள்ளதை அவதானிக்க முடிகிறது என, அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், தனது உரையில்-

கடற்படையால் கைதுசெய்யப்பட்டு - வெலிக்கடையில் கைகள் கட்டப்பட்டு, பேரினவாதிகளின் அடாவடித்தனத்திற்குப் பலியானவர்களில்- குட்டிமணி, தங்கத்துரை உட்பட 53 பேர் அடங்குவர். இந்தக் கடற்படையினர்தான், இன்றும் சமாதானத்தைக் குலைக்க முயல்கின்றனர்.

பேரினவாதிகளுக்கு ஆதரவாக இயங்குகின்ற தமிழ்க்கட்சிகளான - ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எப் (வரதர் அணி), புளொட் போன்ற கட்சிகள் கூட்டமைப்புடன் சேராவிட்டால் பரவாயில்லை. தமிழ்த் தேசியத்தைத் தாரைவார்க்காதீர்கள் என்பதேயாகும்.

சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களை நாம் கேட்பது - சிங்கள மக்களை ஒன்றுபடுத்தித் தீர்வினைப் பெற்றுத்தாருங்கள். எங்களிடம் இருந்து பறித்த உரிமையைத்தான் நாங்கள் கேட்கின்றோம்.

சமாதானத்திற்காக சுயகௌரவத்தை இழக்கமுடியாது. பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படவேண்டுமானால், கௌரவமான பூரண அதிகாரமுடைய இடைக்கால நிர்வாகம் வழங்கப்படவேண்டும்.

நாம் முன்னெடுத்துச் செல்லும் ஒற்றுமையைக் குலைத்து, செயலிழக்கச் செய்யாது, புலிகளின் தலைமையின்கீழ் ஒன்றுபட்டுச் செயற்படுவோம் என, அவர் தமது உரையில் மேலும் தெரிவித்தார்.

## ஐயனார் கோவில் பகுதியில் மிதிவெடியகற்றும் நடவடிக்கை

யாழ்ப்பாணம் - தட்டாதெரு, ஐயனார் கோவில் பகுதியில் மிதிவெடி அகற்றும் நடவடிக்கையில் 'ஹலோ ட்ரஸ்ட்' மிதிவெடி அகற்றும் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

கடந்தகால யுத்த நடவடிக்கையின் போது - பெருமளவிலான மிதிவெடிகள் குடாநாட்டில் புதைக்கப்பட்டன. தற்போது இந்த மிதிவெடி களை கட்டங்கட்டமாக அகற்றும் பணியில் - 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனம் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

கலட்டி, திறந்த பல்கலைக்கழக அலுவலகம், சீனியர் லேன உட்பட பல இடங்களில் - இந்த நிறுவனம் கட்டங்கட்டமாக மிதிவெடிகளை அகற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### முல்லைத்தீவுக் கடற் பிரதேசத்தில்

# தடைசெய்யப்பட்ட வலைகள் மூலம் சிங்கள மீனவர்களால் மீன்பிடிப்பு!

(வவுனியா)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் - இலங்கை அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி, சிங்கள மீனவர்கள் மீன்பிடிப்பதால், முல்லைத்தீவு மாவட்ட தமிழ் மீனவர்கள் தமது தொழில்வாய்ப்புக்களை இழந்துள்ளனர்.

கொக்கிளாய், புல்மோட்டை ஆகிய கடற்பரப்புக்களில்- சிங்கள மீனவர்கள், சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுருக்கு வலைகளைப் பயன்டுத்தி மீன்பிடிப்பதால், கடலிலுள்ள குஞ்சு மீன்கள் உட்பட அனைத்து மீன்களும் சுருக்கு வலையினுள் சிக்கிக்கொள்கின்றன. இதனால், அப்பகுதியில் மீன்வளம் அருகிவருகின்றது.

முல்லை மாவட்ட தமிழ் மீனவர்களுக்கு, ஆழ்கடலில் மீன்பிடிக்க அனுமதியளிக்கப்படாத அதேவேளை - போதிய சந்தை வாய்ப்புக்களும் இல்லாத நிலையில் - தாம் கஷ்டங்களை எதிர்நோக்குவதாக தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு, அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி, சிங்கள மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு- இராணுவத்தினரும், கடற்படையினரும் உதவிபுரிந்து வருவதாகவும், அப்பகுதி மீனவர்கள் மேலும் தெரிவித்தனர். (03)

### இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்க

## நிறுவன உரிமையாளர்களுடன் ரணில் முக்கிய கலந்துரையாடல்

(கொழும்பு)

வேலைவாய்ப்பற்றிருக்கும் - இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - கொழும்பிலுள்ள சுமார் ஆயிரம் முன்னணி நிறுவனங்களின் உரிமையாளர்களைச் சந்தித்து, கலந்துரையாடலொன்றை நடத்தினார்.

கடந்த தேர்தல் காலத்தில், தேர்தல் விஞ்ஞாபனத்தில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுமுகமாகவே - இந்த வேலைவாய்ப்புக்கள் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன.

இந்த ஆயிரம் நிறுவனங்களினூடாக - கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சிகளைப் பெற்றுத்தருமாறும், அவர் கோரியுள்ளார்.

இதேவேளை - இளைஞர் படையணிக்கும் உதவிபுரிய வேண்டுமெனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - சகல அமைச்சர்கள், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

எந்தவொரு அமைச்சர்களும், இளைஞர் படையணிக்கு உதவிபுரிவதில்லை எனத் தெரிவித்த பிரதமர், தத்தமது பிரதேசங்களில் இளைஞர் படையணிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்குமாறும் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பணித்துள்ளார்.

## காக்கைதீவில் குப்பைகளால் போக்குவரத்துக்கு பாதிப்பு!

காக்கைதீவு வெளியில்- பெருமளவிலான குப்பைகள் கொட்டப்பட்டு வருவதால், இந்த வீதியால் பொதுமக்கள் செல்லமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக, மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாநகரசபையினரால் நகரப்பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகள், அழுக்குகள் போன்றன - சனநெருக்கடி குறைந்த காக்கைதீவுப் பகுதியில் கொட்டப்பட்டு வருகின்றன. கொட்டப்பட்ட அழுக்குகள் - காகங்கள், நாய்களினால் இழுத்துவரப்பட்டு, வீதியில் சிதறிக்காணப்படுகின்றன. இதனால் - இந்த வீதியால் பயணம் செய்யும் பொதுமக்கள், பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

## மட்டு. பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்புக்காக இராணுவத்தினர்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் - நகருக்கு வெளியேயுள்ள, பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுமென, பொறுப்பதிகாரிகள் கருதினால் - இராணுவ அணியைப் பாதுகாப்புக்காக, பொலிஸ் நிலையத்திலோ அல்லது அருகிலோ நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை- வாழைச்சேனை பொலிஸ்நிலையதற்கு முன்பாக, பொதுமக்கள் குழுவொன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சம்பவத்தையடுத்து, வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திற்கு இராணுப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதுடன், பொலிஸ் நிலைய வளாகத்தில் இராணுவ கவசவாகனமும் தயார்நிலையில் நிறுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எனக் கருதுமிடத்து - இராணுவத்தினரின் மேலதிக பாதுகாப்பைப் பெறுமாறு, பொலிஸ் நிலையங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை - மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு மற்றும் வீதிரோந்து நடவடிக்கைகளில் பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினரும் செயற்பட்டுவருகின்றனர்.

# இடைக்கால நிர்வாகத் திட்டவரைபினால்



நாட்டில் இணக்கமுள்ள மத்திய ஆட்சி தோன்றுமா? என்ற கேள்வி கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர் முக்கியமான விவகாரமாகியுள்ளது. ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பிரதமராகவும், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாகவும் செயற்படுகின்றபோது - மத்திய ஆட்சியில் இணக்கமுள்ள போக்கு ஏற்படுமா? என்ற சந்தேகம்

டத்தில் குறைத்திருந்தது. இதுவே ஏனைய நாடுகள் இலங்கையின் உள்விவகாரத்தில் தலையிடும் நிலைமையை ஏற்படுத்தியது. ஆனால், அந்த அனுபவம் இன்னும்கூட ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகளால், அனுபவங்களாக ஏற்றுக் கொள்ளப்படாத நிலையே காணப்படுகின்றது.



ரணில் விக்கிரமசிங்க (நடுவில்) மற்றும் (இடது) மஹிந்த ராஜபக்ஷ, அனுரா பண்டார நாயக்க

ஆரம்பத்திலேயே உருவானது.

இந்திய நாட்டைப்போல ஜனாதிபதிக்குக் கூடுதலான அதிகாரம் வழங்கப்படாதிருந்தால், இங்குள்ள தற்போதைய நிலைமை- சற்று வித்தியாசமானதாக இருந்திருக்கும். இதனால், இனப்பிரச்சினைத் தீர்வு முன்னெடுப்பில்கூட, சில முன்னேற்றங்களை எதிர்பார்த்திருக்கலாம்.

இன்னும் இந்தக் கட்சிகளில் அங்கம்வகிப்போர், இனவாதப் போக்கிலேயே நடத்துகொள்கின்றனர். இவர்கள், நாட்டின் நலனைக் கருத்

கள் குறித்து, உரிய முறையில் இணக்கங்கள் எட்டப்படாதிருந்தமையும், இந்தக் குழுவின் இயலாமைக்கான காரணங்களாகும்.

இதேவேளை, இந்தச் சந்தர்ப்பத்தில்தான் சர்வதேச அமைதிப்படை ஒன்றை இங்கு கொண்டுவருவது குறித்த சர்ச்சையை ஜே.வி.பி. கிளப்பியுள்ளது.

லண்டனில் அரசியல் அஞ்ஞாதவாசம் புரியும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, இது தொடர்பாக ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் சர்வதேச அமைதிப்படையை - தமிழீழ விடுதலைப் புலிகள் விரும்புகின்றனர் என, அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே 1983 ஆம் ஆண்டு ஆடி இனக் கலவரத்தின் பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகள் இவ்வாறான ஒரு ஏற்பாட்டை விரும்பியதாகவும், சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார். சர்வதேச அமைதிப்படையொன்று இலங்கைக்கு வருமாகவிருந்தால், அது இலங்கை இராணுவத்தின் போர் செய்யும் மனோநிலையைக் குறைக்கக்கூடும். அது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வாய்ப்பாக அமைந்துவிடும் என்றே மக்கள் விடுதலை முன்னணித் தலைவரின் அறிக்கை - எண்ணத்தூண்டலை ஏற்படுத்துகின்றது.

இதற்கிடையில் இராணுவத்தினர் சம்பந்தப்பட்ட இன்னுமொரு விடயமும் கடந்தவாரம் தென னிலங்கை அரசியற்களத்தில் பேசப்பட்டது. இலங்கைப் படையினரை, சர்வதேச அமைதி காப்புப் படையில் சேர்த்துக்கொள்ளும் விடயமே அதுவாகும். படைத்தரப்பிலிருந்து கசிந்த தகவல்களின்படி, தற்போதைக்குச் சர்வதேச அமைதிகாப்புப்படைப்பிரிவொன்று ஈராக் நாட்டுக்குத் தேவைப்படுகின்றது.

எனினும், இந்தப் பேச்சுவார்த்தையில் இறுதி இணக்கம் எதுவும் எட்டப்படவில்லை.

இதற்கிடையே தென்னிலங்கையில் தற்சமயம் ஆட்சிமாற்றம் என்ற நிலைப்பாடு ஓய்வெடுத்துக்கொண்டிருக்கின்றது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியும்- மக்கள் விடுதலை முன்னணியும் தமது தனிப்பட்ட விடயங்கள், பொதுவான விடயங்களில் எப்போது இணக்கம் ஒன்றை எட்டுகின்றனவோ, அன்றுதான் இந்த ஆட்சிமாற்ற நடவடிக்கை தென்னிலங்கையில் புத்துயிர் பெறும்.

அதுவரை குறிப்பிட்ட இரண்டு கட்சிகள் பேச்சு நடத்துவதைக்கூட, தென்னிலங்கை ஊடகங்கள் தற்போதைக்குக் கண்டுகொள்ளாத தன்மை ஏற்பட்டுள்ளது. இருந்தாலும் நிறைவேற்று அதிகாரம் பொருந்திய ஜனாதிபதிக்கும், பிரதமர் ரணில் அரசாங்கத்திற்கும் இடையில், மீண்டும் அரசியல் முறுகல்நிலை உருவாகியுள்ளது.

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகப் பரிந்துரையில் குழறுபடியிருப்பதாக வெளியான செய்தியே, இந்த அரசியல் மோதலுக்கான காரணமாகும்.

முதலில் அரசாங்கம் தனக்கு அனுப்பி

# மீண்டும் துளிர்விடும் ரணில்-சந்திரிகா முறுகல்!

ஆனால், தற்சமயம் ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற இரண்டு கட்சிகளுக்கு மத்தியிலும் பகிரப்பட்டுள்ள ஆட்சி அதிகாரத்தின் நன்மைகள், மக்களைச் சென்றடைவதில் பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றன. அமைச்சரவை பிரதம மந்திரியினுடையதாக இருக்கின்ற அதேநேரம், அந்த அமைச்சரவையின் தலைமைப் பொறுப்பை ஜனாதிபதி கொண்டிருப்பது சிக்கல் நிலைக்குக் காரணமாகவுள்ளது.

இலங்கையின் அரசியலமைப்பு மற்றும்

## தெற்குத் திசையினிலே...

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

தேசியக் கொள்கைகளில் காணப்படும் கட்சி ரீதியான செல்வாக்குகளே இந்த நிலைக்குக் காரணமாக இருக்கின்றது.

இந்தியா உட்பட ப்ல நாடுகளில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், தேசியக் கொள்கைகளில் பெரியளவிலான மாற்றங்கள் ஏற்படுவதில்லை. உதாரணமாக - தமிழீழ விடுதலைப் புலிகள் விடயத்தில் ராஜீவ்காந்தி கொலைக்குப் பின்னர், இந்திரா காங்கிரஸ் கட்சி கடைப்பிடித்த கொள்கைகள், பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்தபின்னர் - மாற்றம் பெறும் எனப் பலராலும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், இந்திய நாட்டின் தேசிய மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகள் இதற்கு வழிவிடவில்லை.

இந்த உதாரணத்தை இலங்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது - கொள்கைகள் என்ற விடயத்தில், இலங்கை தூரத்தே நிற்கவேண்டிய நிலையிலுள்ளது. வரலாறுகள் கற்றுத் தந்த பாடங்கள், இலங்கையில் அனுபவங்களாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதே உண்மை. 1983 ஆம் ஆண்டு இனக்கலவரம் இலங்கையின் நன்மதிப்பைச் சர்வதேச மட்

திற்கொள்வதாகத் தெரியவில்லை.

இதேவேளை, இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதில் தோன்றியுள்ள இழுபறிகளால், ஏற்பட்டுவரும் இடைவெளிகள் நாளுக்குநாள் அதிகரிக்கப் பல புதிய பிரச்சினைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

அரசு - புலிகள்,பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட வேளையில், இரண்டு தரப்பும் சமநிலை இராணுவமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதன் அடிப்படையிலேயே போர்நிறுத்த உடன்பாடும் செய்துகொள்ளப்பட்டது. இந்த நிலையில், இந்தச் சமநிலை- இராணுவத் தரப்புக்களுக்கிடையில் ஏற்பட்டு வருகின்ற இடைவெளிகள், உப பிரச்சினைகளைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றன.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவைப் பொறுத்தவரையில், இந்தக் குழு 20 வருட காலமாக யுத்தத்தில் ஈடுபட்ட இரண்டு இராணுவத் தரப்புக்களுக்கும் மத்தியில், இணக்கம் ஒன்றை அதாவது- மோதலற்ற நிலையை உருவாக்குவதில் இன்னமும் கொள்கை ஒன்றை வகுத்துக் கொள்வதில் சிரமத்தை எதிர்நோக்குகிறது.

போர்நிறுத்தத்தின்போது, ஏற்படுகின்ற மீறல்கள் குறித்து இந்தக்குழுவினால் நேரடித் தீர்மானங்கள் இன்னும் எடுக்கமுடியாத நிலை காணப்படுகிறது. இது குழுவின் இயலாமையை எடுத்துக்காட்டுவதுடன், அதன் சேவையைத் தமிழ்மக்களும், சிங்கள மக்களும் விமர்சிக்கும் அளவிற்குக் கொண்டு சென்றுள்ளது. இதற்குப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின்மீது முழுப்பொறுப்பையும் சுமத்தமுடியாது.

அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற பொறுப்புக்களின் வரையறையும், போர்நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டபோது, அதில்- தீர்க்கமாகக் கடல் வலய போர்நிறுத்த தன்மை

அமெரிக்கப் படைகள் ஈராக்கில் தாக்குதலகளை நடத்தியதன் பின்னர், தமது ஆதிக்கம் மாத்திரமே அங்கு இருப்பதாக வெளியாகிக் கொண்டிருக்கும் தகவல்களை மூடிமறைக்க-

வைத்திருந்த பரிந்துரையைக்கொண்டு, ஜனாதிபதி நாட்டுமக்களுக்கு உரையாற்ற ஆயத்தமானார். ஆனால், அவரின் வெளிவிவகார



கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலவ்சனுடன் கேணல் தீபன்

அமெரிக்கா முயற்சி செய்கின்றது.

இதன் அடிப்படையில் சர்வதேச அமைதி காப்புப் படைகளின் வேண்டுகோளை விடுத்த போதும், அதனை இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் நிராகரித்துவிட்டன. ஆனால், இலங்கை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும், அமெரிக்காவுடன் உறவுகளைக் கொண்டிருக்கும் அமைச்சர் மிலிந்த மொறகொட இந்த அமைதிகாப்புப் படையில் - இலங்கைப் படையினரைச் சேர்த்துக்கொள்வது குறித்து, அமெரிக்காவுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்த ஆலோசனையின் அடிப்படையில், ஜனாதிபதி நாட்டுமக்களுக்கான தமது உரையை ரத்துச் செய்துவிட்டார்.

ஆனால், நாட்டுமக்களுக்கான உரையை ஜனாதிபதி நிகழ்த்த வேண்டாம் எனவும், தம்முடன் குறிப்பிட்டதினத்தில் இடம்பெறும் முக்கிய பேச்சுவார்த்தையில் ஜனாதிபதி பங்கு கொள்ள வேண்டுமென்றும் மக்கள் விடுதலை முன்னணி கொடுத்த அழுத்தமே, சந்திரிகாவின் உரை ரத்துச்செய்யப்பட்டதற்கான காரணம் எனவும் கூறப்படுகின்றது.

# போதைப் பொருட்களின் பாவனை மன்னார் மாவட்டத்தில் அதிகரிப்பு!

## அரசியல் கட்சி உறுப்பினருக்கும் தொடர்பாம்

மன்னார் மாவட்டத்தில் போதைப் பொருட்களின் பாவனையும், விற்பனையும் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது.

இது தொடர்பாக - மன்னார் பள்ளிமுனைப் பகுதியில் நடைபெற்ற போதைப்பொருள் விழிப்புணர்வுக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய, வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்ததாவது -

மன்னார் மாவட்டம் முழுமையாக எமது கட்டுப்பாட்டினுள் இருக்குமானால், சில மாதங்களுக்குள் எம்மால் போதைப் பொருள் விற்பனை கட்டுப்படுத்த முடியும் என தெரிவித்தார்.

இதேவேளை - நேற்று முன்தினம் பேசாலைப் பகுதியில் நாலரைக் கிலோ கிராம் போதைப் பொருளுடன் வந்த ஒருவரைக் கைதுசெய்த கடற்படையினர், அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தாமல் விடுதலை செய்துள்ளனர்.

இதேவேளை-மன்னார் மாவட்டத்தில், இவ்வாறு போதைப் பொருட்களின் விற்பனை அதிகரிப்புடன், அரசியற்கட்சியொன்றின் முக்கிய உறுப்பினர் ஒருவருக்கும் தொடர்பு இருப்பதாக, பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினர் தெரிவித்தனர்.

# கால்நடை வளர்ப்போருக்கான வைத்திய இடம்பெயர் சேவை

கால்நடை உற்பத்தித் திணைக்களமும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து, இம்மாதம் 23 ஆம் திகதிமுதல் அடுத்த மாதம் 18 ஆம் திகதிவரையான காலப்பகுதியில், வன்னிப் பிரதேசத்தில் கால்நடை வளர்ப்போருக்கான இடம்பெயர் சேவையினை நடத்தி வருகின்றது.

இச்சேவையில் கால்நடைகளுக்கான தடுப்பூசி ஏற்றல், காளைகளுக்கு நலம் அடித்தல், செயற்கை முறைச் சினைப்படுத்தல் சேவை, கால்நடை சினைப்படுத்தப்பட்டதை உறுதிப்படுத்தல் பயிற்சிகள் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன. கால்நடைகள் வைத்திருப்போர் இந்த இடம்பெயர் சேவையில் பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (122)

### தபால் அலுவலகத்திற்கு நிதி ஒதுக்கீடு

முல்லை மாவட்ட தபால் அத்தியட்சகர் அலுவலகமும், விடுதியும் முல்லைத்தீவில் அமைக்கப்படவுள்ளதாக முல்லை மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

இதன்கென 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இதற்கான கேள்விப்பத்திரங்கள் விரைவில் கோரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (122)

## வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்மொழித் தின விழாவிலிருந்து....





கீழைத்தேய வாத்திய அணிவகுப்பு



மாலை அணிவித்து வரவேற்கப்படும் யாழ்.அரச அதிபர்.



மங்கள விளக்கேற்றுகிறார் பேராசிரியர் அ.சண்முகதாஸ்



வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு பரிசு வழங்குகிறார் அரச அதிபர்



விழாவில் கலந்துகொண்ட பிரமுகர்கள்

# பொ.ஐ.முவின் ஆட்சிக் காலத்தில் பத்தாயிரம் படையினர் பலி!

## பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தகவல்

(கொழும்பு)

1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற யுத்தத்தில் - முப்படைகளையும் சேர்ந்த 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட படையினர், உயிரிழந்துள்ளதாக, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

1995 ஆம் ஆண்டிற்குப் பின்னர் விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற யுத்தத்தில் - இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றைச் சேர்ந்த பத்தாயிரத்துக்கும் அதிகமான படையினர் உயிரிழந்துள்ளனர்.

இந்த யுத்தத்தில் முப்படைகளையும் சேர்ந்த, மூவாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் காணாமற்போயுள்ளனர். அத்துடன், 28 ஆயிரத்து ஐந்நூறு பேர் காயமடைந்து, அங்கவீனர்களாகியுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# இலங்கை அரசு
# வடக்கு கிழக்கு மாகாண சபை

## வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
## கடன் இல - 2880 சி.இ. (C.E)
## தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்
## (நிர்மாண வேலைகள்)

# கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி (I.F.B)

ஐஎவ்பி இல: கேஎன்/நீர்ப்/சிஎல்ஜி/01 திகதி: 25.07.2003

01. வடக்கு கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடன் ஒன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவனையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒருபகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின்கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி (IBRD) கடன் வசதி ஐ.டீ.ஏ (I.D.A) நம்பிக்கையின் மீதான வசதி

02. மாவட்டச் செயலாளர், கிளிநொச்சி, இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

03. மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது கிளிநொச்சியில் மாற்றத்தக்கதான கிளிநொச்சி மாவட்டச் செயல்ாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி அவர்களிடமிருந்து 28.08.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம,
கிளிநொச்சி.

05. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் கிளிநொச்சி மாவட்டச் செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 29.08.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன் கையளிக்ப்படல் வேண்டும்.

தலைவர் (துரித மீளமைப்புத் திட்டம்)
கேள்விச்சபை,
மாவட்டச் செயலகம்,
கச்சேரி,
கிளிநொச்சி.

அதேதினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலைநாளன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

06. வேறு விபரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

அட்டவணை

| கேள்வி குறியீட்டு இல | வேலை விபரம் | கேள்வி பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை நிறைவேற்றப்படவேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| கேஎன்/நீர்ப்/சிஎல்ஜி/ சிபி 05 | பளை நகர நூல்நிலைய கட்டடம் மீள் நிர்மாணம் | 36,000.00 | 250.00 | 08 மாதங்கள் |
| கேஎன்/நீர்ப்/சிஎல்ஜி/ சிபி 06 | இயக்கச்சி ஆயுர்வேதக் கட்டடம் மீள் நிர்மாணம் | 34,000.00 | 250.00 | 06 மாதங்கள் |

07. கேள்விதாரர்கள், கேள்விதாரர்களுக்கான செயற்பிரமானக் குறிப்புக்கள் 3 ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளின் ஆகக்குறைந்த தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக் கேள்வி விளம்பரத்திலுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும் ஆளணியும் அனுபவமும் இருப்பது ஒரு தனி ஒப்பந்தத்திற்கு தேவைப்படும் தகைமைகளைத் திருப்திப்படுத்துவதாக வேண்டும்.

தி.இராசநாயகம்,
மாவட்டச் செயலாளர் . அரசாங்க அதிபர்.
கிளிநொச்சி மாவட்டம்

(சி-1277)

நமது ஈழநாடு
hanadu
The Leading Daily of Tamils' Homeland

# அமைதி முயற்சிக்கு எதிரான பிரசாரத்துக்கு 1,500 விகாரைகளில் தகவல் மையங்கள்!

## தேசிய பிக்குகள் முன்னணி நடவடிக்கை

(கொழும்பு)

தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அமைதி முயற்சிகளால், இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை விளக்குவதற்காக, நாட்டிலுள்ள ஆயிரத்து ஐந்நூறு விகாரைகளில் - தகவல் நிலையங்களைத் திறக்கவிருப்பதாக, தேசிய பிக்குகள் முன்னணி அறிவித்துள்ளது.

அமைதி முயற்சிகளால் - நாட்டுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் பற்றியும், இந்த அச்சுறுத்தலுக்குப் பாதுகாப்பு வழங்கிவருகின்ற - அச்சுறுத்தலைக் கண்டும் காணாததுபோல இருந்துவரும் இலங்கைப் போர்நிறுதத் கண்காணிப்புக்குழுவின் செயற்பாடுகள் பற்றியும், சிங்கள மக்களுக்குப் போதிய விளக்கத்தை அளிக்கவே - இந்தத் தகவல் நிலையங்களைத் திறக்கவிருப்பதாக, தேசிய பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியிலுள்ள முக்கிய நகரங்களில் அமைந்துள்ள விகாரைகள் இதற்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக, தேசிய பிக்குகள் முன்னணியின் செயலாளர் வண.கலவெல சந்திரலோக தேரர் தெரிவித்தார்.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு எதிராக, தங்கள் செயற்பாடுகளின் - முதற்கட்டமாக, இந்த தகவல் நிலையங்கள் அமையும் எனவும், இந்தத் தகவல் நிலையங்களில் உள்ளவர்கள் விகாரைக்கு வரும் மக்களைச் சந்தித்து, நாட்டுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலைப் பற்றி விளக்குவார்கள் எனவும் இம்முன்னணி அறிவித்துள்ளது.

குறிப்பாக, அரசாங்கம் - விடுதலைப் புலிகளுக்கு வழங்கவுள்ள இடைக்கால நிர்வாகம் எவ்வித ஆபத்துக்களைக் கொண்டிருக்கிறது என்பது பற்றி, மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த, தகவல் நிலையங்களில் கடமையாற்றுபவர்கள் முயற்சிசெய்வார்கள் எனவும், வண. கலவெலக சந்திரலோக தேரர் மேலும் தெரிவித்தார்.

போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதன் பின்னர், விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவருகின்ற பல யுத்த நிறுத்தமீறல் சம்பவங்களை, இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிந்துவைத்திருந்தும், அதனை அனுமதித்திருப்பதாகவும், அவர்கள் - விடுதலைப் புலிகளுக்கு சார்பாகவே செயற்பட்டுவருவதாகவும் தெரிவித்த வண.கலவெல சந்திரலோக தேரர் -

தாங்கள் தமிழருக்கோ, முஸ்லிம்களுக்கோ சமமான உரிமைகள் வழங்கப்படுவதை எதிர்க்கவில்லை எனவும், ஆனால் - விடுதலைப் புலிகளுக்கு அதிகாரம் வழங்குவதை தாம் எதிர்ப்பதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை, விடுதலைப் புலிகள் - தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் அல்ல எனவும், அரசாங்கத்தினால் வழங்கப்படக்கூடிய இடைக்கால நிர்வாகம், விடுதலைப் புலிகள் தமக்கென ஒரு தனி ஈழத்தை உருவாக்கவே வழி செய்யுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை - இந்தத் தகவல் நிலையங்கள் அமைக்கப்படுவதைத் தொடர்ந்து, நாடளாவிய ரீதியில் எதிர்ப்புப் பேரணிகளை நடத்தத் தாங்கள் திட்டமிட்டுள்ளதாகவும், தேசிய பிக்குகள் முன்னணி அறிவித்துள்ளது.

# நாட்டுப்பற்றுடன் கூடிய புதிய அரசு; ஜனாதிபதி சந்திரிகா முயற்சிக்கிறார்!

## மங்கள சமரவீர கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டுப்பற்றுடன் கூடிய, புதிய அரசியல் கலாசாரத்தை அறிமுகப்படுத்தி, புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் - ஜனாதிபதி சந்திரிகா ஈடுபட்டுள்ளதாக, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதான அமைப்பாளர் மங்கள சமரவீர தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்தாவது-

தேசாபிமானமற்ற அரசியல்வாதிகளை, தமது கட்சியில் சேர்த்துக்கொள்ளும் நோக்கம் ஜனாதிபதிக்கு இல்லை.

அரசின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தம்முடன் இரகசியமாகக் கலந்துரையாடியதாகச் செய்திகள் வெளியானதன் பின்னரே, மங்கள சமரவீர இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய இரகசிய சந்திப்புக்கள் ஒருபோதும் இடம்பெறவில்லை என்றும், அதற்கான தேவை பிரதான எதிர்க்கட்சிக்கு இல்லை என்றும், அவர் தெரிவித்தார்.

# புலிகள் வழங்கிவரும் ஆதரவினால் சமாதான முயற்சிகள் தொடரப்படும்!

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு எதிர்க்கட்சியினர் பூரண ஆதரவு வழங்க வேண்டும். சமாதான முயற்சிக்கு, விடுதலைப் புலிகள் ஒத்துழைப்பு வழங்கிவருவதனால் சமாதான நடவடிக்கை தொடரும் என்பதில் சந்தேகமில்லை என்று அரசியல்யாப்பு விவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

சமாதான முயற்சியில் பலரும் பல குறைபாடுகளைக் காணுகின்றனர். சமாதான முயற்சி என்பது நெடுந்தூரப் பயணமாகும். இதில் ஏற்படும் தடைகளைக் கடந்து தீர்வொன்றைக் காண்பதற்கு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும், அமைச்சர் கோரிக்கை விடுத்தார்.

இலங்கை நீதி சமாதானம் மற்றும் ஒப்புரவுக்கான இயக்கம் நேற்று கொழும்பில் நடத்திய - "இடைநிறுத்தப்பட்ட சமாதான முயற்சி" எனும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே நீதி, அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

### ஜே.வி.பி - பொ.ஐ.மு ...

ஒத்துழைப்புக்களையும் வழங்குமெனத் தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டணியாக இணைந்து செயற்படுவதில் தடையாக இருந்த பல விடயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வந்தபோதிலும், அந்த பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் - இதுவரை வெற்றியளிக்கவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் - தாங்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தியபோதும், கூட்டணியின் தலைமைத்துவம் பற்றி ஒரு இறுதியான முடிவுக்கு வரமுடியவில்லை என ஜே.வி.பி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜே.வி.பி. கோரியதற்கு மாறாக- சிறிலங்கா சுதந்திரக்கட்சி, கூட்டணியின் தலைமைப் பொறுப்பையும், பொதுச் செயலாளர் பதவியையும் தனக்கே வேண்டுமென அடம்பிடித்து வருவதாகவும், தேசிய அமைப்பாளர் பதவியை மட்டுமே ஜே.வி.பிக்கு வழங்கமுடியுமென அவர்கள் கூறிவருவதாகவும், ஜே.வி.பி.யினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - ஜே.வி.பியுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்துமுகமாக, தேசிய ஐக்கிய முன்னணியின தலைவியான பேரியல் அஷ்ரப்பை, ஜே.வி.பியுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கேட்டுள்ளதாகவும் தகவலொன்று வெளியாகியுள்ளது.

இவ்வாறான சந்திப்பு ஒன்று அண்மையில் நடந்ததாகவும், இதன் போது பேரியல் அஷ்ரப்புடன், தேசிய ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த முக்கியஸ்தர்களான சேகு இஸ்ஸதீன், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா ஆகியோரும், ஜே.வி.பி. தரப்பில் விமல் வீரவன்ச, அனுரா திஸநாயக்க, நந்தன குணதிலக ஆகியோரும் பங்குபற்றியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், இந்தப் பேச்சுக்களில்- முடிவுகள் எதுவும் எட்டப்பட்டதா என்பது பற்றி, தகவல் எதுவும் வெளியாகவில்லை.

### மாகாண...

அபிவிருத்தி செய்யவேண்டும். யாழ்ப்பாண மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு, அனைவரும் முன்வரவேண்டும்.

கடந்தகால யுத்தத்தினால் யாழ். மாவட்ட மாணவர்களே கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்போதும் கூட, யாழ். மாவட்டத்தில் பல மாணவர்கள் கல்வியைப் பெறமுடியாமல் உள்ளனர். பலர் பாடசாலைகளுக்குச் செல்லமுடியாத நிலையில் உள்ளனர்.

இவ்வாறான போட்டிகளில் கலந்து கொள்ளாத மாணவர்களைப் பற்றியும் நாம் சிந்திக்கவேண்டும். இவர்களுக்கு உள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து, இம்மாணவர்களையும் போட்டிகளில் பங்குகொள்ளச் செய்ய வேண்டும் என, அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து 'கவின் கலைகள்' போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்களையும், பரிசில்களையும் பிரதம விருந்தினர் செ.பத்மநாதன் வழங்கிக் கௌரவித்தார்.

இதனைத் தொடர்ந்து, போட்டியில் வெற்றிபெற்ற நாட்டுக்கூத்துக்கள் மேடையேற்றப்பட்டன. (லி)

### கடன் அட்டை...

கள் 5 பேரும் கடன் அட்டை மோசடியில் ஈடுபட்டுவந்ததாக, லண்டன் புலனாய்வுப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இவர்கள் - 60 இலட்சம் பவுண்ஸ பெறுமதியான நிதியினை மோசடி செய்துள்ளமை தெரியவந்துள்ளது. இவர்கள் ஐவரும் 98 வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து இந்த மோசடிச் செயலில் ஈடுபட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட 5 தமிழர்களும் - நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் குறித்துப் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.

### ரணிலை...

மாதமளவில் நடக்குமென, அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை - தாம் முதலில் கேட்டுக்கொண்டதற்கு அமைய, விடுதலைப் புலிகளுக்கு - இடைக்கால நிர்வாகம் பற்றிய திட்ட வரைபுகள் அனுப்பப்படுவதற்கு முன்னர், அது- அமைச்சரவையில் வைத்து விளக்கப்படவேண்டும் என, ஜனாதிபதி கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆனால், இது கவனத்தில் கொள்ளப்படாமை குறித்து ஜனாதிபதி சந்திரிகா கோபமடைந்திருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ், அரசாங்கம் இடைக்கால திட்ட வரைபு குறித்து மேற்கொள்ளும் நடவடிக்கையில் ஜனாதிபதி பெரும் அதிருப்தி கொண்டிருப்பதாகக் கூறினார்.

# ஒட்டகப்புலம் தேவாலய வழிபாட்டுக்கு 14 வருடங்களின் பின்னர் அனுமதி!

## 250 இற்கு மேற்பட்டோர் திருப்பலியில் பங்கேற்பு

(நெல்லியடி)

பலாலி தெற்கு, ஒட்டகப்புலப் பிரதேசத்தில் அமைந்துள்ள புனித யாகப்பர் ஆலயத்திற்கு - அந்தப் பிரதேச மக்கள் சென்று வழிபாடு செய்வதற்கு நேற்றுப் படையினரால் அனுமதி வழங்கப்பட்டது.

இதையடுத்து அந்த ஆலயத்தில் - அச்சுவேலி பங்குத்தந்தை அருட்திரு அன்ரனிதாஸ் அடிகளின் தலைமையில், நேற்று 12.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இந்த வழிபாட்டில், அப்பிரதேசத்தைச் சேர்ந்த இருநூற்றைம்பதுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். அச்சுவேலி பலாலி வீதியின் ஊடாகவே மக்கள் இந்த ஆலயத்திற்கு சென்றுவர அனுமதிக்கப்பட்டனர்.

காவலரண்களில் அடையாள அட்டைகள் ஒப்படைக்கப்பட்டு, இராணுவத்தினரின் வழிகாட்டலில், பலாலி வீதி வழியே ஆலயத்திற்கு செல்ல மக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

14 ஆண்டுகளுக்குப் பின்னர், பொதுமக்கள் இந்த ஆலயத்திற்குச் சென்று வழிபாடு நடத்த படையினர் அனுமதித்திருந்தனர்.

இந்த ஆலயம் பெருமளவு சேதமடைந்திருப்பதுடன், ஆலயத்தின் கதவுகள் யாவும் கழற்றப்பட்டிருப்பதாகவும், சொரூபங்கள் எதுவும் அங்கு காணப்படவில்லை எனவும் அங்கு சென்றுவந்த மக்கள் தெரிவித்தனர்.

திருப்பலி நடைபெற்று கொண்டிருந்தபோது, இராணுவத்தினர் ஆலயச் சுற்றாடலில் சூழ்ந்து காணப்பட்டனர். திருப்பலி முடிவுற்றதும் சிறிது நேரம் அங்கு மக்கள் தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டு, பின்னர் ஆலயத்திற்குச் சென்ற வழியினூடாகத் திரும்பிவர அனுமதி வழங்கப்பட்டது. (13)

# புலிகளின் செயற்பாடுகள் பற்றி ஈ.பி.டி.பி அறிக்கை தயாரிப்பு!

(கொழும்பு)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த குழுவொன்று, கடந்த வாரம் திருகோணமலைக்கு விஜயம் செய்து, விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கை ஒன்றைத் தயாரித்து - ஐ.நா.செயலாளர் கோபி அனானுக்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இதற்காக, திருகோணமலையில் தங்கியிருந்த இந்தக் குழுவினர் - இன்று கொழும்புக்குச் சென்று, தென்பகுதி அரசியல் தலைவர்களையும் சந்திக்கவுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

### கிழக்கிற்கு...

அவர் பேச்சு நடத்தவுள்ளார். இதேவேளை, நேற்று மட்டக்களப்பு தரவை மீனகம் இராணுவத் தளத்தில் நிகழ்ந்த - கப்டன் அன்பரசியின் எட்டாவது ஆண்டு நினைவு நிகழ்விலும், அரசியற்துறைப் பொறுப்பாளர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியதாகத் தெரியவருகிறது.

## பயிற்சிப் பத்திரிகையாளர் தேவை

பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

குறிப்பிட்ட காலம் பத்திரிகைத்துறையில் செய்முறைப் பயிற்சி வழங்கப்படும். பயிற்சிக்காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும். பயிற்சி முடிவில் பத்திரிகைத்துறையில் நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

எதிர்வரும் 29.07.03 அன்று காலை 11.00 மணிக்கு அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

நிர்வாக இயக்குநர்
நமது ஈழநாடு

SPOKEN ENGLISH WITH GRAMMAR
LECTURES BY MR. M.A.HARI
புதிய பிரிவு ஆரம்பம்
02.08.2003
சனி காலை 7.00மணி
Saturday Sundasy ▶ 7.00 - 8.00 A.M
DIRECTOR HARY'S INSTITUTE
இல 564. கஸ்தூரியார் வீதி
(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம். (சி-1278)

உங்கள் பணத்தைச் சேமியுங்கள்

| | | | |
|---|---|---|---|
| PI 100MHz SEIMENS 0.8 GB H.D Rs. 13,000/- | PI 133MHz COMPAQ 1.2 GB H.D Multimedia Rs. 17,000/- | PII 266MHz DELL 3.2 GB H.D Multimedia Rs. 26,000/- | PII 350MHz DELL 6.4 GB H.D Multimedia Rs. 29,000/- |
| PII 450MHz DELL 6.4 GB H.D Multimedia Rs. 34,000/- | PIII 450MHz DELL 6.4 GB H.D Multimedia Rs. 38,000/- | | |

அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கணனிகள் 1 வருட உத்தரவாதத்துடன்

STP Your Partner in IT Solutions
54A, Palaly Road, Kantharmadam
T.P:0212222674

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.